# ஸத்திய தரிசனம்.

மகாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

பாகம் 4. அத்தியாயம் 47.

## ஒரு சுங்கக்காரரைக் காப்பாற்றிய விபரம்.

இதன் வாசகர்களுக்குப் பார்ஸி ரஸ்டோம்ஜியின் பெயர் தெரிந்திருக்கும். அவர் என்னுடைய கக்ஷிக்காரராகவும், சகாவாகவுமானர். முதலில் சகாவாகி, பிறகு கக்ஷிக்காரராரென்று சொல்லுவது அதிகப் பொருத்தமுடையதாக இருக்கும். அவருடைய பூரண நம்பிக்கையை நான் பெற்றிருந்ததால், அவருடைய குடும்ப விவகாரங்களிலும் என்னுடைய யோசனையை அவர் கேட்டு வந்தார். அவர் பிணிவாய்ப்பட்டிருந்த சமயத்திலும் என்னுடைய யோசனையைக் கேட்பார். எங்களிருவருடைய வாழ்க்கை முறையில் அதிக வித்தியாசமிருந்த போதிலும், என்னுடைய வைத்திய முறையில் அவருக்கு நம்பிக்கையிருந்து வந்தது.

இந்த நண்பர் ஒரு சமயத்தில் மாட்டிக் கொண்டுவிட்டார். அவ்ருடைய விஷயங்களில் பலவற்றை அவர் எனக்குச் சொல்லி வந்த போதிலும், ஒரு விஷயத்தை மட்டும் எனக்குத் தெரிவிக்காமல் மறைத்து வைத்துக்கொண்டிருந்தார். அவர் பம்பாயிலிருந்தும், கல்கத்தாவிலிருந்தும் வாளமாகச் சாமான்களைத் தருவிப்பவர். சில சமயங்களில் திருட்டுத்தனமாகவும் அவர் சாமான்களைத் தருவித்து வந்தாரென்று தெரிகிறது. ஆனல் சுங்க அதிகாரிகளுடைய அத்யந்த நண்பராக அவர் இருந்து வந்ததால் ஒருவரும் அவரிடத்தில் சந்தேகப்படுவதில்லை. சுங்க வரி விதிப்பதில் அவருடைய இன்வாய்ஸ்களையே அவர்கள் நம்பி வந்தனர். சிலர் இதற்கு உடந்தையாகவும் இருந்திருக்கலாம்.

திருட்டை மறைக்க முடியாது என்று ஒரு வசனமுண்டு. ஆகவே, பார்ஸி ரஸ்டோம்ஜியும் அதை மறைக்க முடியவில்லை. அவர் கன்னங்களில் கண்ணீர் வடிய என்னிடம் ஓடிவந்து, "பாய்! நான் உங்களைமோசம் செய்து விட்டேன். என்னுடைய குற்றத்தை இன்று கண்டுபிடித்துவிட்டார்கள். நான் திருட்டுத்தனமாகச் சாமான்களைத் தருவித்துவிட்டேன். என்னுடைய கதி அதோ கதி தான். நான் சிறைக்குச் செல்லவேண்டிவரும். நான் வீணய்ப் போய்விடுவேன். நீங்கள் தான் இந்தச் சந்தர்ப்பத்தில் என்னைக்காப்பற்ற முடியும். உங்களிடம் நான் எதையும் மறைப்பதில்லை. ஆனல் வியாபாரத் தந்திரங்களை உங்களிடம் சொல்ல வேண்டாமென்று நினைத்து, திருட்டுத் தனமாகச் சரக்குகளைத் தருவிப்பதைச் சொல்லாமலிருந்துவிட்டேன். அதற்கு இப்பொழுது மிகவும் வருந்துகிறேன்" என்று சொன்னர்.

நான் அவரைச் சமாதானப் படுத்தி உங்களைக் காப்பாற்றுவதும் காட்டிக் கொடுப்பதும் கடவுள் செயல். என் சம்பந்தப்பட்டவரையில் என் வழி உங்களுக்குத் தெரிந்தது தான். உண்மையை ஒப்புக்கொள்ளுவதாக இருந்தால் தான் உங்களைக் காப்பாற்ற முயற்சி செய்யலாம்" என்று சொன்னேன்.

அவருக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை. கலங்கிப் போய்விட்டார். "உங்களிடம் உண்மையை ஒப்புக்கொண்டது போதாதா ?" என்று அவர் கேட்டார். "நீங்கள் எனக்குத் தவறு செய்யவில்லை. கவர்ன்மெண்டுக்கன்றோ தவறு செய்திருக்கிறீர்கள் ? என் முன் குற்றத்தை ஒப்புக்கொள்ளுவதால் என்ன பிரயோஜனம் ?" என்று நான் சாந்தமாகச் சொன்னேன். "நீங்கள் சொல்லுகிறபடி செய்கிறேன். ஆனல் என்னுடைய பழைய வக்கீல்... ஐக்கலந்து கொள்ளக்கூடாதா ? அவரும் நண்பர்தான்" என்று சொன்னர். விசாரித்ததில் இவ்விதம் திருட்டுத் தனமாகச் சரக்கைத் தருவிப்பது வெகு காலமாக நடந்து வந்திருக்கிறதென்றும், இப்பொழுது குற்றம் கண்டுபிடிக்கப்பட்டது சொற்பத் தொகையைப் பற்றியதென்றும் தெரியவந்தது. அவருடைய வக்கீலிடம் போனேம். அவர் தஸ்தாவேஜுகளைப் பார்த்துவிட்டு "இந்தவழக்கு ஜூரிகள் முன் போகும். நேட்டால் ஜூரிகள் இந்தியர்களை விடுதலை செய்யமாட்டார்கள். இருந்தாலும் எனக்கு நம்பிக்கையில்லாமலில்லை" என்று சொன்னர்.

இந்த வக்கீலிடத்தில் எனக்கு அதிகப் பரிச்சயமில்லை. பார்ஸீ ரஸ்டோம்ஜி குறுக்கிட்டு "வந்தனம். இந்த விஷயத்தில் மிஸ்டர். காந்தி சொல்லுகிறபடி நடந்துகொள்ள விரும்புகிறேன். அவசியமான சந்தர்ப்பங்களில் அவருக்கு யோசனை சொல்லுங்கள்" என்று சொன்னர்.

இவ்விதம் வக்கீல் விஷயத்தைத் தள்ளிப் போட்டுவிட்டு, ரஸ்டோம்ஜி கடைக்குப் போனேம்.

அங்கு நான் அவரிடத்தில் "இந்த வழக்கு கோர்ட்டுக்குப் போகும்படி விட்டு விடக்கூடாது. உங்கள் மீது வழக்குத் தொடருவதும் உங்களை விட்டுவிடுவதும் துறைமுக அதிகாரியின் இஷ்டத்தைப் பொறுத்ததாக இருக்கிறது. அவர் அட்டர்னி ஜெனரல் சொல்லுகிறபடி நடக்கவேண்டியவர். நான் இருவரையும் கண்டு பேசத் தயாராக இருக்கிறேன். அவர்கள் விதிக்கும் அபராதத்தைக் கொடுக்க நீங்கள் தயாராக இருக்கவேண்டும். அவர்களும் அதற்கு இணங்கக்கூடும். அவர்கள் இணங்கிவராவிடில் சிறைக்குச் செல்ல நீங்கள் தயாராக இருக்க வேண்டும். குற்றஞ் செய்வது அவமானமேயன்றி சிறைக்குச் செல்லுவது அவமானகாமானதன்று. அவமானகரமான காரியத்தைச் செய்தாகிவிட்டது. தண்டனையைப் பிராயச்சித்தமெனவே நீங்கள் கருதவேண்டும். இனிமேலும் இத்தகைய குற்றத்தைச் செய்வதில்லையென்று நீங்கள் சங்கற்பம் செய்து கொள்ளவேண்டும்" என்று சொன்னேன்.

அவருக்கு நான் சொன்னது பிடித்தமாக இருந்ததாவென்று நான் சொல்ல முடியாது. அவர் தைரியசாலிதான். இருந்தாலும், அந்தச் சமயத்தில் அவருடைய தைரியம் போய்விட்டது. அவருடைய பெயருக்கும் கியாதிக்கும் பங்கம் விளைவதாக இருந்தது. இவ்வளவு காலமாகக் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பெயர் போய்விட்டால் என்னபிரயோஜனம் ?

"சரி உங்களிஷ்டப்படி நடக்கத் தயார் என்று சொல்லிவிட்டேன்." உங்கள் இஷ்டம்போல்செய்யலாம்" என்று சொன்னர்.

என்னுடைய சாமர்த்தியம் முழுவதையும் இந்த வழக்கில் உபயோகித்தேன். துறைமுக அதிகாரியைக் கண்டு, பயமின்றி நடந்த விஷயங்களைச் சொன்னேன். எல்லாக் கணக்குகளையும் ஆஜர் செய்வதாகவும், பார்ஸி ரஸ்டோம்ஜி தாம் செய்த பிசகுக்கு மிகவும் வருந்துவதாகவும் சொன்னேன்.

அவர் "அந்தப் பார்ஸியிடத்தில் எனக்கு அனுதாபமுண்டு. அவர் இவ்விதம் முட்டாள்த்தனம்செய்து விட்டாரேயென்று நான் வருத்தப்படுகிறேன். என்னுடைய கடமை இன்னதென்பது உங்களுக்குத்தெரியும். அட்டர்னி ஜெனரல் சொல்லுகிறபடியே நான் செய்யவேண்டும். அவரைக்கண்டு பேசி சரிப்படுத்துங்கள்" என்று சொன்னர்.

"நீங்கள் அவரைக் கோர்ட்டுக்கு இழுக்கவேண்டுமென்று வற்புறுத்தாமலிருந்தால் நான் மிகுந்த நன்றியுடையவனக இருப்பேன்" என்று சொல்லி, அவரிடம் வாக்குப் பெற்றுக்கொண்டு, அட்டர்னி ஜெனரலுக்கு எழுதி, அவரையும் நேரில் கண்டுபேசினேன். என்னுடைய அந்தரங்க சுத்தியை அவர் மெச்சி, நான் ஒன்றையும் மறைக்கவில்லை யென்பதைத் தெரிந்துகொண்டார்.

இந்தக்கேஸ் சம்பந்தமாகவோ, வேறு கேஸ் சம்பந்தமாகவோ நான் கேட்டு இல்லாமற்போவது ஒன்றில்லையென்று அவர் சொன்னதென்பது எனக்கு ஞாபகமில்லை.

பார்ஸீரஸ்டோம்ஜிகேஸ்ராசிசெய்யப்பட்டுவிட்டது. எத்தனை ரூபாய்க்குச் சரக்கு திருட்டுத்தனமாகத் தருவித்திருப்பதாக அவர் ஒப்புக்கொண்டாரோ அதற்கு இரட்டிப்பு அபராதம் அவர் கொடுக்கவேண்டியதாயிற்று. ரஸ்டோம்ஜி இந்தக்கேஸ் விவரத்தைஎழுதி, மற்றவர்களுக்கு வழிகாட்டியாகவிருக்கும் பொருட்டுத் தமது கடையில் தொங்கவிட்டு வைத்தார்.

தற்காலீகமாகச் செய்த பரிகாரத்திலிருந்து நம்பிக்கை வைத்துவிடாதீர்கள் என்று சில நண்பர்கள் எச்சரிக்கை செய்தனர். இதை நான் அவருக்குத் தெரிவித்தபோது "உங்களுக்கு நான் துரோகம் செய்தால், என் கதி என்னவாகும்!" என்று அவர் சொன்னர்.

# வைதீகரின் வாழ்க்கை.

ஸ்ரீ அ. கு. அண்ணுமலை எழுதியது.

7-வது அத்தியாயம்.

## வைதீகர் பட்ட பாடும், வைத்தியர் கெட்ட கேடும்.

வெய்யிலைப் பொறுத்தாலும் வேதனையைப் பொறுக்க முடியாத வைதீகர் தனக்கு ஏழரைநாட்டுச் சனியன் பிடித்திருப்பதாக எண்ணிக்கொண்டு தன் பூணூலையும், குடுமியில் பாதியையும் காணுததைப்பற்றி வருந்தி வேகமாய் நடந்து ஆனந்தபுரியெனுமூரை யடைந்தார்.

ஆனந்தபுரியிலுள்ள தன் தங்கையின் வீட்டை யடைந்தார். அங்கு தன் தங்கையும், அவள் குமாரனும், குமாரத்தியும, புருஷனும் அமைதியான எளிய வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தார்கள். தங்கையின் குமாரனின் பெயர் சுப்பிரமணியன். குமாரத்தியின் பெயர் ஜானகி. இந்த சுப்பிரமணியனுக்கே தன் புத்திரியான அசோதையை மணம் முடிக்க வேண்டுமென்பது வைதீகரின் எண்ணம். இந்த ஜானகியையே தன் புத்திரன் பரமேஸ்வரனுக்கு விவாகம் செய்து வைக்க வேண்டுமென்னு மெண்ணமுமுண்டு. வைதீகரைத் தங்கையான கோமதி அன்பு கொண்டுவரவேற்றுஉபசரித்தாள்.விருப்புடன் விருந்து நடத்தினர். அன்பு மணங்கமழ்ந்தது. வைதீகர் தங்கை கோமதியும் அவர் புருஷனும் நமது வைதீகர் மன்றல் விஷயமாய்வந்திருப்பாரென்றுஎண்ணியிருந்தார்கள்.

சில தினங்கட்குப் பின் வைதீகர் தான் வந்ததின் உண்மையை உரைக்க எல்லோரும் வியப்படைந்தனர். இவரைக் கர்நாடக மனிதனென்று கூறிக் கேலிசெய்தனர். தன் குமாரனின் கொள்கையே யங்கும் பரவியிருந்தது. நமது வைதீகருக்கு அது வேப்பெண்ணெய் போலிருந்தது.

சில நாட்களுக்குப் பின் வைதீகருக்குப் பல்வலி வந்தது. ஒரு நாள் வைதீகர் கையில் பணமெடுத்துக் கொண்டு வைத்தியர் வீட்டை விசாரித்தறிந்து தனியாகச் சென்றார். பல் வைத்தியரை அடைந்து விஷயத்தைச் சொல்லிப் பணத்தையும் கொடுத்துவிட்டார். விஷயம் முடியுமுன் பணத்தைக் கொடுப்பது முடிவில் விபரீதத்திலேயே முடியும்.

பற்களைப் பிடுங்குவதே சிறந்ததென வைத்தியர் கூற வைதீகரும் ஒப்புக்கொண்டார்.

குடிகாரர்களுக்கும் புத்தி ஸ்வாதீனமற்ற பைத்தியக்காரர்களுக்கும் வித்தியாசம் ஏதுமில்லை. குடி குடியைக் கெடுப்பதோடு அதன் பக்கத்தில் போவோரையுங் கெடுக்கிறது. குடிகாரர் இல்லற வாழ்க்கையில் அன்பும், சமாதானமும், சந்தோஷமும் மருந்துக்கும் கிடையா. குடி மனிதனுடைய அறிவையும், ஜீவாக்ஷாமிர்தமான இரத்தத்தையும் குடித்து விடுகிறது.

இந்த வைத்தியர் பக்காக்குடிகாரர். இவர் மனைவியோ இவருக்கும் பெரியவளே. வைதீகர் பற் பிடுங்கச் சென்ற சிறிது நேரத்திற்கு முன் தான் வைத்தியர் குடியெனுங் குதிரையிலேறி கிதானந் தப்பிச் சென்றதினுல், அவர் மனைவிக்கும் அவருக்கும் பெரிய சண்டை நடந்தது. சண்டை முடிந்து கோபாக்கினி யெரிந்து கொண்டிருக்கும் வேளையில் தான் நமது வைதீகரும் போய்ச்சேர்ந்தார்.

வைதீகருக்கு மீதி யிருந்தவை ஒன்பது பற்கள்தான். இப்போது பிடுங்கச் சம்மதித்தது இரு பற்களையே. வைத்தியர் உத்தரவின் பேரில் வைதீகர் ஒரு வில் சோபாவில் படுத்தார். வைத்தியர் ஒரு பொத்தானை அழுத்தியதும் வில்கள் வைதீகரின் கைகளையும் உடம்பையும் திமிற விடாமல் பற்றிக்கொண்டன. உடனே வைத்தியர் சில ஆயுதங்களை எடுத்துக்கொண்டு வைதீகரின் பக்கத்தில் வந்து பற்களைப் பிடுங்க ஆரம்பித்தார். பேய் பிடித்த பெண்கள்தலைகளைப்போலாடிச் கொண்டிருந்த இரு பற்களையும், வலியின்றி சுலபமாய்ப் பிடுங்கிவிட்டார்.

வைத்தியர், மனைவிமேலுள்ள கோபத்தாலும் மதுபானப் போதையாலும் நிறையப்பட்டிருந்தார்.மனைவிமேலுள்ள கோபத்தைப் பற்களிடத்தில் காட்ட ஆரம்பித்தார். மதுபானப்போதையால் சுய அறிவற்றிருப்பதோடு ஆத்திரத்தால் தூண்டப்பட்ட வைத்தியர் வைதீகர் துடித்தலற அலற மீதியிருந்த ஏழு பற்களையும் தன் முழு பலத்தையும் உபயோகித்துப் பிடுங்கிவிட்டார். எலிபோல் வில் சோபாவிலகப்பட்ட வைதீகர் நெருப்பிலகப்பட்ட புழுப்போல துடித்தார். கலங்கினர். கதறினர். அழுதார். என்செய்வார் பாவம்! சொற்பப் பல்வலியை நீக்கப் பிரயாசைப் பட உள்ள பற்களும் போய் வாய் நிறைய வலிகள் முளைத்துவிட்டன.

தீய ஒழுக்கமுள்ள வைத்தியர்களிடமும், அரை குறை வைத்தியம் தெரிந்தவர்களிடமும், குடி முதலிய வகையருக்களின் நேசமுடைய வைத்தியர்களிடமும் வைத்தியம் செய்தல் தீது. பிரமாதமாக அப்படிச் செய்வேனிப்படிச் செய்வேனென வாய்ப்பந்தல் போடும் வைத்தியர்களிடமும், அனுபவ மற்ற வைத்தியர்களிடமும் நம்பிக்கை வைப்பதானது மண்குதிரையை நம்பி ஆற்றி லிறங்கி யவன் கதையாக முடியும்.

வைதீகர் வாயில்இரத்தப்பிரவாகமும் கண்ணில்கண்ணீர்ப்பிரவாகமும் ஓடின. வேஷ்டியும் பாழானது. பின் வில் சோபாவிலிருந்து விடுவிக்கப்பட்டார். வைதீகருக்கு வலியின் கொடுமையால் பேச முடியவில்லை. மயக்கம் வந்தது. பிணம் போல கிடந்தார்.

வைத்தியர்:—(வேலைக் காரியை நோக்கி) வெந்நீர் வைத்து உடனே கொண்டுவா.

மனைவி:—சரி, சரி (சிடுசிடுப்புடன்)

என்று உள்ளே சென்று வெந்நீர் வைத்து சுடச்சுட வேலைக்காரியிடம் அனுப்பினள்.

வைத்தியர்:—(வேலைக் காரியை நோக்கி) வெந்நீரைக் கொண்டு அந்த கிழவன் வாயிலுள்ள ரத்தத்தைச் சுத்தம் செய்.

உத்தரவுக்குச் சிறிதும் மீருத அந்த கிழ வேலைக்காரி வெந்நீருள்ள டம்ளரைச் சேலையின் நுனியால் சூடு பொறுக்கமுடியாததால் பிடித்துக் கொண்டு வைதீகரின் வாயில் சிறிது வார்த்தாள். திடீரென வைதீகர் சூடு

([illegible] 7-ம் [illegible])

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## அந்தோ
## விண்ணுற்றனையே!

அருப்புக்கோட்டை எனும் நல்லூர் நவமணியே! திருநல்லூர் திருமேனியே!! நாடார் உலகின் நன்மணியே!!! நின் வாழ் நாள் முடிவுற்ற செய்தி "மித்திரன்" மூலம் அறிந்து திடுக்கிட்டேன். "மித்திர"னில் நினக்காக விடுக்கப் பெற்ற "இரங்கற்பா" முதன் முதல் என் கண்களில் விழவும், கண்களில் நீர் ததும்பி மேலே செல்ல முடியாது சுமார் 10 நிமிஷம் திகைப்புறச் செய்தது. "இரங்கற்பா" படித்து முடித்து அதிபரின் உப அங்கம் படித்து நடுக்கமும், வாழ்வின் அநித்தியமும் தோன்றலாயின. நின்னோடு நெருங்கிப் பழகியிருந்தவர்களில் நானும் ஒருவன் என்று திடமாய்க் கூறுவேன். 1920-ம் ஆண்டில் சின்னையாபுரத்தில் நின்னைச் சந்தித்தேன். அன்று முதல் நின் நெருங்கிய அன்பனாகவும், சகோதரனாகவும், தோழனாகவும் என்னைக் கொண்டாய். 1923-ம் ஆண்டின் துவக்க முதல் 1925-ம் ஆண்டு மத்திவரையும் "நாடார்குல மித்திரன்" ஆபீஸ் உத்தியோகஸ்தனாக நான் இருந்த பொழுது என் விசாரணைக் கர்த்தனாக டெ ஆபீஸ் மானேஜர் பதவியை ஏற்றிருந்தாய். "மித்திரன்" ஆபீஸ் தென் பக்கம் நாற்காலியில் அமர்ந்து இன்புற்ற முகத்துடனும், ஆழ்ந்த கருத்துடனும் உட்கார்ந்திருந்த உன் களங்கமற்ற திருமேனி எங்கே?

நின் திருமேனி சாம்பலாய்ப் போய் விட்டதோ! உன் அஸ்திகள் கங்காநதியில் எறிய விடப்பட்டிருக்கலாம். ஐயோ! நின்னை—நின் மேனியைக் காணாமல் போனது குறித்து அழுவதா? நின் கொள்கையும், எண்ணமும், வழியும், செயற்கரிய செய்கையும், நல்லாலோசனையும், தொண்டும் நினைத் தழுவதா?

"நாதன்", "மேனி", "திருமேனி", "பி. டி. ஆர்.", "நாடோடி" முதலிய புனைப் பெயர் கொடுத்து நின் கரத்தால் எழுதும் கட்டுரைகளை "மித்திரன்" ஆபீஸில் நேரிலேயே பத்திரிகையில் வெளிவருமுன்பும், வந்த பின்பும் பன்முறை படித்துச் சந்தேகம் நேர்ந்துழி நின்னோடு தர்க்கமாடிச் சமாதானம் பெற்று வந்ததை நினைத் தழுவதா?

நின் பிரமச்சரியம் என்னும் விரதத்தைத் தடுத்து இல்லற வாழ்க்கையில் நின்னை ஈடுபடுத்தி நின்னை ஓர் திருவள்ளுவனாக்கி விட முயன்ற காலத்தை நினைத் தழுவதா?

நின் தேச சேவையையும், ஜாதீய சேவையையும் எப்போது காண்பது என்று நினைந் தழுவதா?

"மெய் வருத்தம் பாரார், பசி நோக்கார், கண் துஞ்சார், எவ்வெவர் தீமையுமேற் கொள்ளார்—செவ்வி அருமையும் பாரார், அவ மதிப்பும் கொள்ளார், கருமமே கண்ணாயினர்" என்ற நன்னெறியின் வண்ணம் நின் வாழ்க்கையைச் சதா கருமத்திலேயே ஈடுபடுத்தி அன்னம் விடுத்து, தேச நலம் குன்றச் செய்து எவர் தயவுக்கும் தாட்சண்ணியத்திற்கும் அடிமைப் படாது "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்பதை நிலை நாட்டிய நின் வைராக்கியங் குறித்து அழுவதா? மனிதர்க்கு மனிதர் தாழ்ந்தவரல்ல என்ற எண்ணங் கொண்டு 13 லட்சம் நாடார் சமூகத்தினரில் ஒருவனாக வைக்கம் சென்று சத்தியாக்கிரஹ இயக்கத்தில் கலந்து சமூக மானத்தைக் காத்த பேருழியத்தை நினைந்தழுவதா? எதை நினைத் தழுவது?

ஐயோ! நீ மாண்டு விட்டாய். உன் பெற்றார், உற்றார், உறவினர்க்கு யாது சொல்லிப் போனாய்? உன் பேரில் ஏக்கம் மிகுந்து வாட விட்டுப் போன என் போன்ற நண்பர்களுக்கு என்ன சொல்லிப் போனாய்? நின்னைக் காண்பதெப்போ?

உலகப் பிரசித்தி பெற்ற உடுமலை, சரபம். ஸ்ரீ முத்துச்சாமிக் கவிராயர் அவர்களின் சீஷர் ஸ்ரீமான் ச. சு. சங்கரலி...

1923-ம் ஆண்டு ஆகஸ்டு மீ 8 உ அருப்புக்கோட்டைக்கு விஜயம் செய்த போது நின்னைப் போற்றி,

"அலைமகள் மார்பில் நிற்கும்
அறமும் நின் கரமேல் நிற்கும்
கலைமகள் நாவில் நிற்கும்
கடவுள் உன் கருத்தில் நிற்பார்
சிலைமகள் மேவு நல்லூர் திருமேனி
[நாதா எங்கள்
தலைவனாய்க் கீர்த்தி யோங்கித்
தாணியில் வாழ்வா யப்பா"

என்று பாடிய சீட்டுக் கவி என் செவியில் இன்றும் ரீங்காரம் செய்து கொண்டிருக்கிறதே! மண்ணுலகத்தில் செய்துள்ள நின் ஊழியம் சிறப்புறச் செய்ய—அரங் கேற்றம் செய்ய விண்ணுலகத்திற்கு எம் பெருமான் நின்னை அழைத்தனரோ? இந்திய தேச சீர்திருத்தங்களைக் காலஞ் சென்ற தேச பக்தர்கள் சூக்ஷ்ம சரீரிகளாய் நின்று கண்டு களிப்புறுவது போல நாடார் உலகின் க்ஷேமத்தையும், நாட்டின் க்ஷேமத்தையும் கண்டுகளிக்க விண்ணுற்றனையோ?

காலஞ் சென்ற தேச பக்தர்களாம் ஸ்ரீ தாதாபாய் நௌரோஜி, ஸ்ரீ திலகர், ஸ்ரீ கோகலே, ஸ்ரீ தாஸர், ஸ்ரீ ராஜாராம்மோகன்ராய் முதலியவர்களுடன் நினக்கும் ஆசன மளிக்கப் பட்டிருக்கிறதோ? ஐயோ திருமேனி! என் செய்வேன்!! நின் பொன்னுலகப் பிரயாணம் கேள்வி யுற்ற என் குடும்பத்தார் சிறிது நேரம் அப்படியே ஸ்தம்பித்துப் போனார்கள். கண்களில் நீர் ததும்பி ஐயோ! ஐயோ!! வென்று கலங்கி நின்றனர்.

இனி என் செய்வது! நின் ஆத்மா சாந்தி யடையப் பிரார்த்திக்கின்றேன். அருப்புக்கோட்டை ஜீவகாருண்யப் பிரசார சபையார் நின் வேலையைத் தளராது செய்வதும், நின் பேரால் ஞாபகச் சின்னம் வைத்து ஜீவகாருண்யப் பிரசாரம் செய்வதும் பொருத்தமாகும்.

பாரத மாதா ஓர் இளங் குமரனாகிய உன்னைப் பறி கொடுத்துப் புலம்புகிறாள். அப் புலம்பல் நின் செவிகளில் தொனிக்கிறதா? நின் ஆன்மா சாந்தி யடையட்டும்.

எஸ். ஏசுதாஸ் நாடார்,
வேவத்தலர்வா,
இலங்கை.

ஃ ஃ

## அனுதாபங்கள்.

நம்குல இளஞ்சிங்கமும், வைக்கம் வீரரும், கர்த்தர் அபிமானியும் குல மத தேச அபிமானங்கள் ஒருங்கே அமையப்பெற்ற வருமான திருமேனி நாதனவர்கள் மரணத்தைக் குறித்து எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்னவர் மரணமானார் என அறிந்ததும் துக்கக்கடலில் மூழ்கினம். நம் மித்திரனும், நாடார் சமூகமும், நம் தேசமும் ஓர் சிறந்த உபகாரியை இழந்துவிட்டன. ஈசா! அன்னவரின் ஆத்மா சாந்தி அடைய அருள்புரிந்து அன்னவரின் குடும்பத்தாருக்கு ஆறுதலளிப்பாயாக.

க: பொ. சோமசுந்தரநாடார்,
கச்சினவிளை.

ஃ ஃ

நமது நண்பர், திருமேனிநாதர்திருப்பரம பதமடைந்ததை "மித்திர"னில் கண்டு திடுக்கிட்டுப் போனேன். நாடார் உலகமே ஓர் நற் புத்திரனை இழந்தது. சென்னையில் அகில இந்தியக் காங்கிரஸின் போது, ஆலயப் பிரவேச விஷயமாய் நாங்கள் கடைசியாய்ச் சம்பாஷித்ததை நினைக்குந் தோறும் அடங்காத் துயரெழுகின்றது. அன்னவரின் ஆன்மா சாந்தியடையச் செய்து உற்றார், பெற்றார், நண்பரனை வருக்கும் ஆண்டவன் ஆறுதலளிப்பாராக.

கோட்டை—எஸ். எஸ். நாடன்.
முக்கூடல்.

## பிராமணீய மொழிந்த
## திருமணம்.

விருதுநகர், முனிஸிபல் சபை மாஜி பிரஸிடென்டும், ஜில்லா போர்டு மெம்பரும், பொதுஜன உபகாரியும், பிரபல வியாபாரியுமான ஸ்ரீமான் மு. ச. பெ. செந்திக்குமாரு நாடாரவர்கள் குமாரர் ஸ்ரீ. சங்கரலிங்கநாடாருக்கும், டையூர் "க்ஷத்திரியப் பெண் பாடசாலை" மானேஜரும், பொதுஜனோபகாரியும், பிரபல பாத்திர வியாபாரியுமான ஸ்ரீமான் பெ. சி. சிதம்பர நாடாரவர்கள் குமாரத்தி ஸ்ரீமதி சரஸ்வதியம்மாளுக்கும் 23–4–28–ல் மங்களகரமாய் நிறைவெய்திய விவாகத்தில், கும்பகோணத்தில் நடைபெற்ற நமது 11-வது மகாநாட்டில் நிறைவேறிய "நம் சமூகக் குடும்பங்களில் நடைபெறும் சுப அசுப காரியங்களில் சுய மரியாதைமுன்னிட்டு பிராமணர்களைத் தவிர்த்துவிட்டு நம்மவர்களைக்கொண்டு சடங்குகள் செய்ய வேண்டும்" என்றதீர்மானத்தின் பிரகாரம் பிராமணப் புரோகிதம் நீக்கப்பட்டது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## நன்கொடை.

விருதுநகர் "நாடார் பரிபாலன சங்க"த்தின் காரியதரிசி நமக்குப் பின்வருமாறு தந்தியனுப்பியிருக்கிறார்:—

"திரு. எம். எஸ். பி. செந்திக்குமாரநாடார்குமாரர்திரு. சங்கரலிங்கத்துக்கும், திரு. பி. வி.சிதம்பர நாடார் குமாரத்தி ஸ்ரீமதி சரஸ்வதிக்கும், பார்ப்பனப் புரோகிதர் இல்லாமலே வைபவமாய் கலியாணம் நடைபெற்றது. கும்பகோணம் "நாடார்மகாநாடு" தீர்மானப்படி இந்த நாடார் தலைவர்கள் நடந்து கொண்டதைப்பற்றிபார்ப்பனரல்லாதார் மிகவும் மகிழ்ச்சியுடனிருக்கின்றனர். இவர்களைப் பின் பற்றி மற்ற நாடார்களும் நடப்பார்களென்று எதிர்பார்க்கப் படுகிறது.

இந்த சுபகாரியத்தின் ஞாபகார்த்தமாக இவ்விரு குடும்பத்தாரும் திராவிடனுக்கு நன்கொடை ரூ. 30 அனுப்பி யிருக்கின்றனர்.

பார்ப்பனப்புரோகிதத்தை நீக்கி இவ்விரு நாடார் தலைவர்களும் மங்கள காரியம் நடத்தினதைப்பற்றி நாம் அவர்களைப்பாராட்டுவதுடன் "திராவிட"னுக்கு நன்கொடையாக ரூ. 30 அனுப்பியிருக்கிறதற்காக நமது மனப் பூர்ணமான வந்தனத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். மணமக்கள் நீடு வாழ்க!

"திராவிடன்."

## கொச்சியில் பழைய சின்னங்கள்.

கொச்சி சமஸ்தானத்தின் பழைய சின்னங்களைக் கண்டு பிடிக்கும் அதிகாரி, சமீபத்தில் சில குகைகளைக்கண்டு பிடித்தார். பர்காளத்திலுள்ள சிறுகுன்றின் மீதுள்ள பகவத் கோவில் பிரகாரத்தில் அக் குகைகள் காணப்பட்டன. அதில் மனிதர்கள் வசித்ததாகத் தெரிகிறது. அக்குகையின் மத்தியில் மண் பாத்திரங்கள் ஒன்றின்மேலொன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. மண் ஜாடியில் மனித எலும்புகள் சில இருந்தன. இந்த சாமான்களை யெல்லாம் கண்காட்சிசாலைக்கு அனுப்பிவிட்டார்கள். இந்த எலும்புகள் சுமார் 2500 வருஷங்களுக்கு முன் பிழைத் திருந்தவர்களுடையதாக இருக்க வேண்டுமென்று தெரிகிறது. இத்தகைய குகைகள் திருவாங்கூரிலும், பாஞ்சாலத்தில் சில இடங்களிலும் காணப்படுகின்றன.

எய்ப் பெல்லாம் செய்து இருப்ப
[தெல் லாம் பறித்துச்
சாப்பிட்டு வருகின்ற சாமார்த்தியப்—
[பார்ப்பனர்கள்
சூக்ஷிக் குள் ளாகாமல் சுயமரி
[யாதை யெனும்
...

## குடும்பப் பெருமை.

பெரியோர்களே! சகோதரர்களே!

இல்லறத் தோடியைந்த வாழ்வே குடும்பவாழ்வு என அறியாதார் யாருமிலர். இவ் வில்லற வாழ்வு பெருமைபட நடைகொள்ள வேண்டுவதே குடும்பிகளின் குறிக்கோளாயிருத்தல் வேண்டும். பெருமை சாலற்கு அகத்தியம் வேண்டற்பாலதுஎன்னென் பின், அது ஒற்றுமையென்போம். ஒற்றுமை யுறுவதற்கு அன்புநிகழல் வேண்டும். அன்பு குறித்து அடுக்கடுக்காய் எழுதப் புகின் விரியும். அப்பெருந்தகையை அன்பு மணங்கமழ்தலோடு குடும்பவாழ்வு கொண்டுவந்தால் குடும்பத்தின்பெருமை தானென்னே!

குடும்பத்தை ஓர் பெரும்பாரம் எனச் சிலர் கூறுவதுண்டு. இன்னார் கூற்றிலிருந்து அறிந்து கொள்ளக்கிடக்கிறது எதெனின், அன்னார் குடும்பத்தில் ஒற்றுமையின்மை யென்பதே. ஒற்றுமை லக்ஷணத்துடன் கூடிய குடித்தனம் தடித்தன மில்லாததேயாம். நடத்தும் விதங்கொண்டு நடத்தினால் தடித்தனமேது?

பிள்ளைப் பேற்றுக்கு முன்பும், பிள்ளை இல்லறவாழ்க்கையிலீடுபடுவதற்கு முன்னும், கணவன் மனைவி பிணக்கினால் குடும்பப்பெருமை சிதையுறும். அது காலத்தில் பரஸ்பரம் அன்பு கொண்டு ஒழுங்கே நடந்துவந்து விட்டாலும், பிள்ளை இல்லற வாழ்க்கையிலீடுபட்ட பின்னர், இல்லம் புகுந்த பெண்ணுக்கும், மாமன் மாமியருக்கும் விகற்பம் ஏற்பட்டு விடுவதாயிருக்கிறது. இதன் பயனாய் அருமருந்தன்ன பிள்ளையும் ஒரு பெரும் விரோதியாக மாறவும் நேரிடுகிறது. ஏன்? மருமகள் வந்தவுடன் மகன் அவள் வயப்பட்டுத்தம்மைவெறுத்து விட்டான் என்று கருதி மகனையும் மருமகளையும் வெறுக்கிறார்கள். பாவம்! தம் மகனுடன் வாழ்க்கைக்குட்பட்டவள் குற்றமற்ற கோதையாயிருப்பினும், இவர்கள் விபரீதபுத்தி மேலாட்டத்தால் பகைமுகங்கொண்டவளாகவே தோன்றும். மகனும் அவள் வாஞ்சையில் நின்றுவிடுகிறான் எனும் மதியும் உண்டாகிவிடும். இக்குரோத குணம் முதிர்ச்சியாக அக்குடும்பத்தில் சண்டையும் சச்சரவும் உண்டாகிவிடுகின்றன. மகனும் மருமகளும் இக்கொடுமைக்கு எதிர்த்தொன்றும் செய்ய வியலாரெனின் தவித்துப் புலம்புவார்கள். மருமகளை யெடுத்துக்கொள்வோம். பெண்! கோழைமனதுடையாள். ஆத்திரம் பொறுக்கமாட்டாது ஆவியை முடித்துக்கொள்கிறாள். ஆ பாவம்! இப்பாவம் மாமன் மாமியரைச் சுற்றி வளைக்குமன்றோ? பாவமொரு புற மிருக்கட்டும். குடும்பப்பெயர் குன்றிவிட்டதல்லவா? அங்கென்ன பெருமை காணக்கிடக்கின்றது? அமைதி வாழ்வு கொண்டு ஆயுளுக்கோர் இதம் தேடினார்களா? இல்லை இல்லை. பிள்ளை யென்று பெற்று பிரியமாய் வளர்த்துவிட்டுப் பின்பு கள்ள நெஞ்சுடையான் எனக் கனத்திடும் பெற்றோர்களால் குடும்பங்கெட்டுப் போகிறதென்று கூறி அம்மட்டில் நிறுத்திவிடுவதற்கில்லை. பிள்ளைகளும் பெண் வயப்பட்டும், அன்றிபெண்ணைத் தம் வயப்படுத்தியும், பெற்றோர்களைத் திரஸ்கரித்து விடுகிறார்கள். இங்கே பிள்ளைக் கொடுமையால் பெற்றோர்கள் உயிர் நீக்க நேரிடுகிறது. இம்மாதிரி அசம்பாவிதங்கள் நேராவண்ணம் பெற்றோர்களும் பிள்ளைகளும் அன்புவழி நின்று ஒரு மனப்பட்டு வாழ்ந்து வருதலே பெருமைக் குரியதாகும். க்ஷேமம் சேர்ந்த வாழ்வு மஃதே. ஆகையால்அன்பு நிலை நிறுத்திக்குடும்பத்தைப் பெருமைபட நடாத்தி வர யாவரும் பெரிதும் முயற்சிப்பார்களாகவும்.

சிவ. கு. சிவசுப்பிரமணியன்,
அருப்புக்கோட்டை.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாம
மேதுமின்றி யெப்பொருட்கு மெவ்விடத்தும்
பிரிவறநின்றியக்கஞ் செய்யுஞ்
சோதியை மாத்தூவெளியைமனதவிழ
நிறைவான துரிய வாழ்வைத்
தீதில் பரமாம் பொருளைத் திருவருளை
நினைவாகச் சிந்தை செய்வாம்.

---

நாடார்குலமித்திரன்
விபவ ௵ சித்திரை மீ 18 உ

## நாட்டுக்கு நல்லகாலம்.

நமது நாட்டுப் பார்ப்பனர்கள் சமயத்தின் பேராலும், சாஸ்திரத்தின் பேராலும் பார்ப்பனரல்லாத மக்களனைவரையும் படிப் படியாக இழிவான முறையில் நடத்திக் கொண்டும், ஒரு சில வகுப்பினரை மிக இழிவான முறையில் நடத்தியும் வந்தார்கள்; வருகின்றார்கள். இவ் விழிவு முறை தமிழ் நாட்டில் இவ்வளவுதானெனச் சாற்றத் தரமன்று. அதாவது:—வேனிற் காலமானாலும் காலில் செருப்பணியக் கூடாது; மழை காலமானாலும் குடை பிடித்துக் கொள்ளக் கூடாது; உயர்ந்த ஆடை யாபரணங்கள் அணிந்து கொள்ளலாகாது; தெருவில் நடக்கக் கூடாது; கிணற்றில், குளத்தில், ஆற்றில் ஸ்நான பானம் செய்யக் கூடாது; ஆரோக்கியமான உயர்ந்த மனைகள் கட்டி வசிக்கக் கூடாது. அந்தோ! கொடுமை!! இம் மட்டோ? படிக்கக் கூடாது; பார்க்கக் கூடாது; இன்னும் எழுதக் கூடாத பல கொடுமைகளுமுண்டு. ஆனா லிவ்வாறு கொடுமைகளுக்குட்பட்ட மக்கள் என்ன செய்ய வேண்டும்? உயர் குலத்தாருடைய மலைகளிலும், வனங்களிலும், வயல்களிலும் சதா மாடாடுகளைப் போல் அலைந்து இராப் பகலின்றி உழைத்து, வயலில் விதைத்து, பயிரை வளர்த்து, அறுத்து, அடித்துச் சுமந்து கொண்டு போய், உண்டு கொழுத்துப் பெண்டு பிள்ளைகளுடன் றிண்டு தலையணைகளிற் சாய்ந்து கிடக்கும் எஜமான்களிடம் சமர்ப்பித்துக் கை கட்டி, வாய் பொத்திக் காத்திருந்து அவர்கள் கொடுத்தது தினையளவாயினு மலையளவாக மதித்து வாங்கிப் புசிக்க வேண்டும். வயிற்றுக்குக் காணவில்லை யென்று கூடச் சொல்லவியலாது. இவ் வநியாயம் பிராமணர்களிட மிருந்தே பிறந்ததென்றாலும், பிராமணரல்லாத ஒரு சில வகுப்பினருக்கும் சகவாச தோஷத்தாலோ உயர் குலப் பைத்தியங் கொண்டு, குலத்தைக் கெடுக்கும் கோடரிக் காம்புகளாய் அவ் வநியாயத்திற்கும், உடன் பட்டவர்களாய் விட்டார்கள். ஆகவே, தீண்டாமை யெனும் பெரு நோய் நம் நாட்டை மிகக் கேவலமான நிலைமைக்குக் கொண்டு வந்து விட்ட தென்பதிற் சந்தேகமில்லை.

இவ் வநியாயங்களுக்கு ஆளான நம் நாட்டு மக்களில் ஒரு சிலர் நம்முடைய தலை விதி இது தான் போலும் என்று மனமுடைந்து அடிமை வாழ்க்கைக்கே ஈசன் அனுப்பி வைத்திருப்பதாக இன்றும் எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். ஒரு சிலர் சுய ரூபத்தைக் கண்ட சிங்கத்தைப் போல் தங்கள் பிறப்புரிமையைப் பெற்றுச் சுயமரியாதை யுடனிருக்க எந்தக் காலத்தில் எந்த முறையைக் கொண்டு போராடலாமோ அதற்குச் சலிப்பின்றி ஆண்மைத் தனத்துடன் வருங் கஷ்டங்களை யெல்லாம் சகித்துக் கொண்டு விடா முயற்சியுடையவர்களாகவே இருந்து வருகின்றார்கள்.

அடித்தவர்க்குத் தொண்டாகிப்
பிடித்தவர்க்குப் பெண்டாகி
அனேக காலம்

வடித்த கண்ணீர் சமுத்திரமாய்
மத்தியுற்ற இந்தியா வாட்டந்
தீரக்

கெடித் தலத்திற் கோட்டை கட்டி
வேட் டெழுப்பிப் பகை
யொதுக்கிக் கிரீடம் பூண்டு

குடித்தனத்தார் வாழ்க வென்
வைத்த தெல்லாம் ஆங்கிலச்
செங் கோலா மொன்றே

என்று சரபகவி யவர்கள் சாற்றியதற் கேற்ப, பிரிட்டிஷ் அரசாங்கத்தாருதவியினாலே ஒரு சிலர் சுக மோடிருக்க நேர்ந்த தென்றாலும், அநியாயப் பழக்க வழக்கங்களும், அதர்ம சாஸ்திரச் சமயக் கோட்பாடுகளும், கோடரிக் காம்புகளால் இவ் வரசாங்கத்திற்கும் ஒருவாறு உடன் பாடாய் விட்டன. நீதியுள்ள அரசாங்கம் வேரூன்றிய பிறகும் சமயப் பூசல்களால் கொள்ளையும், கொலையும் நடக்காம லில்லை. இவ் வநீதத்திலிருந்து எவ்வாறு விடுபடலாமென்ற பெருங் கவலையே பெரும் பகுதியினரைப் பீடித்திருந்தது. நாட்டிற் பெரும் பாலோர் உண்பதற்கும், உறங்குவதற்கும், உடுப்பதற்கும், படிப்பதற்கும் கூட உரிமை யில்லாமற் போராடிக் கொண்டிருந்தமையினாலே தான், படித்தவர்கள் அரசாங்கத்தில் தங்க ளுரிமையை அடையச் செய்த போரில் வெற்றி பெற முடியாமற் போய் விட்டது. இவ் வுண்மையை நம் நாட்டு மக்கள் நன்கு உணரும் வண்ணம் மகாத்மா காந்தி செய்து விட்டா ரென்றாலும், உயர் குலப் பித்தம் பிடித்தவர்கள், சுயநலப் புலிகள், கோடரிக் காம்புகள் ஆகியவர்களுடைய மூளையிற் சரியானபடி இன்னும் பாய வில்லை யென்று தான் சொல்ல வேண்டும்.

இவ் வநியாயமும், அவமானமும் மிகுந்த இக் காலத்தில் நாட்டுக்கு நல்ல காலம் என்று ஏன் சொல்லுகிறோ மென்றால், ஒரு சிலருக்குத் தான் கஷ்டமும், நஷ்டமும், அவமானமும் என்று குறுகிய புத்தியுடன் படித்தவர்களும், பணக்காரர்களும் எண்ணித் தென்னாப்பிரிக்கா நிறத் தடைச் சட்டங்களையும், மிஸ். மேயோ எழுதிய புத்தகத்தையும் கண்டு பயந்து அவமானப்பட்டு சற்றே ஒதுங்கி நிற்கிறது. இந்தியச் சட்ட சபையில் கனம். எம். ஜி. ராஜா பொன்னுரையில் வைதீகப் பித்தளைகள் ஒளி மழுங்கிப் போய் விட்டன. மேலும் ஒரு சிலருக்கிருந்த கஷ்ட நஷ்டமும், அவமானமும் படித்தவர், பணக்காரர், தலைவர் முதலிய அனைவரையும் நோக்கப் போய்ப் பற்றிப் பிடிக்க ஆரம்பித்து விட்டது. அதாவது:—தீண்டாமை ஒழிய வேண்டுமென்றதற்காக மகாத்மா காந்தியைச் சித்திர வதை செய்ய வேண்டுமென்று பம்பாய் மாகாணப் பார்ப்பன ரொருவரும், மகாத்மாவுக்கு மண்டையில் மூளையில்லை யென சென்னை மாகாணப் பார்ப்பன ரொருவரும் செப்பினர். தவிர கன்னியாகுமரிக் கோவிலுக்குள் மகாத்மாவைப் போக விடாமற் றடுத்து விட்டார்கள். சிலோன் தேச பக்தர் ஸர். ராமநாதனை மதுரைக் கோவிலுக்குத் தீண்டாதவராய்ச் செய்து விட்டார்கள். "திராவிடன்" ஆசிரியர் ஸ்ரீ. கண்ணப்பர் திருவண்ணாமலைக் கோயில் பிரவேசத்தில் தீண்டாதவராகிக் கோர்ட்டில் வழக்குச் செய்து கொண்டிருக்கிறார். பாரத தேச பக்த சிரோமணியும், பாஞ்சால வீர சிங்கமுமாகிய லாலா லஜபதிராய் அவர்கள் திருவனந்தபுரம் பத்மநாத சுவாமி கோயிலுக்குத் தீண்டாதவராகித் திகைத்துத் திரும்பி விட்டார். இம் மகான்கள் கதியே இக் கதி யானால் ஏழை மக்கள் பாடு எவ்வாறிருக்கு மென்பதை வாசகர்களே உணர்ந்து கொள்ள வேண்டும். மகாத்மா, ஸர். ராமநாதன், ஸ்ரீ கண்ணப்பர், லாலா லஜபதி முதலிய தலைவர்களுக்கு நேர்ந்த அவமானம் பொதுவாக நம் நாடனைத்துக்கு மென்றே நாட்டி லெல்லாரும் நன் குணர்ந்து சுயமரியாதை இல்லதேல் சுயராஜ்யமு மில்லை; தீண்டாமை யுண்டேல் ஈண்டேது சுயராஜ்யம் என்று தெளிவாய்ச் சொல்லி விட்டார்கள். மேலும் தன்னாட்டில் தானிருக்கக் கூடாதவாறு தேசப் பிரஷ்டம் செய்யப் பட்டும், பின் தன் தேசத்துக்கு வர முடியாமல் தடுக்கப்பட்டும், அமெரிக்காவில் அடைக்கப்பட்டுமிருந்த அவமானத்தைப் பார்க்கிலும் கோளத்தில் கேவலம் சோம் பேறிச் சோத்து மாடன்கள் நிறைந்த கோயிலுட் பிரவேசிக்காமற் றடுக்கப்பட்ட அவமானம் பெரிதா சிறிதா வென்று லாலாஜீ எண்ணாமலிருக்க முடியாது என்பதற்குப் பின்னால் அவர்கள் பொறித்த பொன்னுரைகளே சான்றாகும். ஆகையால் நாட்டுக்கு நல்ல காலம் என்று சொன்னோம்.

மகாத்மா காந்தி, திலகர், ஸி. ஆர். தாஸ், கோக்லே முதலிய தலைவர்கள் தென்னாட்டுப் பிரயாணத்தைப் போல் லாலாஜீ பிரயாண மில்லாமல் ஏழை மக்கள் வீடுகளுக்கு நேராகச் செல்லும் நேரான பிரயாணமா யிருந்ததினால் நாட்டுக்கு நல்ல கால மென்று சொல்லுகின்றோம். கோயில்களில் தீண்டாதவர்களாய்ப் போன தலைவர்கள் தீண்டாமையைப் பற்றிச் சிந்தியா திருக்க முடியுமா? அதைத் தீர்க்கத் தியாகம் செய்யா திருக்க முடியுமா? அப்படியிருப்பார்களானால் அவர்கள் தெருவிலும் தீண்டாதவர்களாக மாட்டார்களா? நாட்டில் தற்போது [illegible] சுயமரி[illegible]

## சுதேசியம்.

(16—4—28—மித்திரன் தொடர்ச்சி.)

துணியில் செலவிடும் பொருள் மிகுதியாலும் நாடு வறுமை யுறுகிறது. தம் நாட்டுத் துணிகளைத் தாமே யுடுத்திக் கொள்வதினாலுண்டாகும் செலவைக் காட்டிலும், பிற நாட்டுத் துணிகளுக்கிடும் பணம் மிகுதியே யாம் என்பது வெளிப்படை. ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்குப் பஞ்சை யனுப்பி விட்டுத் துணிக்கு எதிர் பார்த்திருந்தால் அனுப்பிய பஞ்சு துணியாகி வருவதற்குள் எவ் வெவ் வகையில் செலவுகளுண்டோ அவையெல்லாம் சேர்த்துத்தானே கிரயம் கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. பணக்காரர்களாயிருப்பவர் செலவைப் பொருட்படுத்தாது உல்லாசமாய்க் கட்டிக்கொள்வார்கள். ஏழைகளால் கூடுமோ? எனினும் துணிகட்டிக் கொள்ளவேண்டிய அவசியத்தை முன்னிட்டு அதற்கென அரும்பாடு பட வேண்டியவர்களாகிறார்கள். தொழிலும் கெட்டு, அதிகப் பணச் செலவுமுண்டாகி ஏழை மக்கள் தவிப்பார்கள். இது நாட்டின் வறுமையன்றோ?

இனி உபயோகித் தலை நோக்குவோம். மேற்கூறியுள்ள துணி, உடைகளைப் போல் உபயோகத்திற்கான பல பல சாமான்கள் பிற நாட்டிலிருந்து புகுந்துவிடுகின்றன. அவற்றில் யாம் கொள்ளவேண்டியன மட்டும் கொண்டு, தள்ளவேண்டியவைகளைத் தள்ளிவிட வேண்டும். அம்மாதிரிச் சாமான்கள் தம் நாட்டிலுமிருக்க அலங்காரத்தைக் கருதி அவற்றில் மோகங்கொண்டுவிடக் கூடாது. அம்மோக மேலீட்டால் தம் நாட்டுச் சாமான்களை உபயோகிக்காது விடுத்தலால் தம் நாட்டுச் சாமான்களின் அபிவிர்த்தி ஒழிந்துபோம். அவற்றின் அபிவிர்த்தி ஒழியும் போது அவை யாக்கல் தொழிலில் ஈடு பட்டுளோர் வேறு தொழில் ஏற்றுக்கொள்வதில் திண்டாட்டம் கொள்கிறார்கள். அத்தொழிலபிவிர்த்தி யோங்கினாலன்றோ மென்மேலும் ஜனங்கள் அதில் இறங்கி நாட்டிலோர் பெரும்பகுதியினர்களுக்குப் பிழைப்பு நடந்து வரும். இப்பிழைப்புக் கெடும் போது அவர்களுக்கு வறுமைப்பிணி வந்து விடுகிறது. நாட்டைத் தம் வீட்டைப் போலெண்ணி மக்கள் க்ஷேமத்தை நாடலே தேச வாஞ்சை கொண்டதாகும். இவ்வாஞ்சை யற்று மேற் கூறிய விஷயங்களில் நாட்டமின்றி தான் றோன்றித் தம்பிரான்களாய்த் திரிந்தால் நாடு வறுமையுற்றே போம். தாமே தம் நாட்டை வறுமைப்படச் செய்வது தேசத்துரோகம். இத்துரோகம் சகோதரத்துரோகமேயாகும். இத்துரோகத்திற்கானாகாமல் நாடு சுபிக்ஷமுற்றிருக்கவே சுதேசியம் வலியுறுத்தப் படுகின்றது.

நம் இந்திய நாட்டை யெடுத்துக் கொள்வோம். எந்நிலைமையிலிருக்கிறதென்று நோக்குவோம். எங்கே அதன் பண்டைப்பெருமைகளை? எங்கே அதன் கைத்தொழில் மாண்பை? எங்கே அதன் செல்வக்கொழிப்பை? ஒன்றும் காண்கிலோம். ஓடி மறைந்தன. ஏன்? சுதேசியம் அக்காலத்தில் தொலையுமாறு செய்துவிட்டதால் என்க.

நம் நாடு அந்நியர் ஆக்ஷிக்குள்ளானது முதல் அந்நியச் சாமான்கள் ஏற்றுத் தன்னகத்துள்ளவற்றைப் புறக்கணித்துவிட்டது. அதனால் அத்தத்தொழில்களின் அபிவிர்த்தி குன்றி அத்தொழில்களும் மறைபட்டுப் போயின. இந்தியா உலகத்தில் நெசவுத் தொழிலில் பிரக்கியாதி பெற்று சகல தேசங்களுக்கும் துணி யேற்றுமதி செய்துவந்த காலமும் உண்டு. இப்போது தனக்கு ஆடையில்லையென

---

யாதை வீரன் தீண்டாமை, பொறாமை, பொச்சரமை முதலிய பிரபலத் துஷ்டர்களைச் சங்காரம் பண்ணி சமரசனுக்கு முடி சூட்டாமல் விடுவானா? விடான், விடான். ஆகையால் நாட்டுக்கு நல்ல காலமென்று நவில்கின்றோம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## நாடார் 12-வது மகாநாடு.

### மதுரை, நாடார் ஊழியப்பிரசாரசபை வேண்டுகோள்.

நாடார் மகாஜனங்களே !

நமது 12-வது மகாநாடு நாளிது ஸ்ரீ ஆனி மீ கடைசி வாரத்தில் அருப்புக்கோட்டையில் நடைபெறும் விபரம் முன் அறிக்கையில் வெளியிட்டிருக்கிறோம். அதற்கு நாம் செய்ய வேண்டிய கடமையைக் கவனிக்க வேண்டுவது முக்கியமாகும். நாடார் குலத்தில் பிறந்த ஒவ்வொருவரும் கான்பரன்ஸ் நடைபெறும் தினங்களை எதிர் பார்க்க வேண்டும். மகாநாட்டுக்கு ஏராளமான ஜனங்கள் போகும்படி விசேஷக் கிளர்ச்சிகள் செய்ய வேண்டும். ஒவ்வொரு ஊரிலும் நம்மவர்களால் உற்பத்தி செய்யப்படும், கைத் தொழிற் சாமான்களை அங்கு நடைபெறும் கண் காக்ஷிக்கு அனுப்ப ஏற்பாடு செய்தல் வேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஊரில் ஏரானமான டிக்கட்டுகள் விற்றுக் கொடுக்க வேண்டும். இன்னும் பல வழிகளிலும் கான்பரன்ஸ் அதி விமரிசையாக நடைபெறுவதற்கு வேண்டிய ஒத்தாசைகள் செய்ய முன் வர வேண்டும். நாடார் மகாஜனங்களும், வாலிப சிகாமணிகளும் இவ் விஷயத்தில் தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்தி ஊக்கத்துடன் வேலை செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

---

அயல் நாட்டை யெதிர்பார்க்கும் காலமாயிருக்கிறது. நம் நாட்டில் விளையும் பஞ்சை அயல் நாட்டுக்கனுப்பிப் பஞ்சை மக்களாய் இருக்கிறோம். இதுபோலவே சகல துறைகளிலும் நம் நிலை தவறி அந்நியரை எதிர்பார்த்தவர்களாயிருக்கிறோம். நாட்டின் பெரும்பாகத்தைப் பஞ்சப் பிணி வாட்டுகிறது. இது பார்த்திருப்பது தேசப்பற்றுடையவருக்கும் சகிக்காது. தேசப்பற்றுடைய பெரிய பெரிய மேதாவிகளெல்லாம் சுதேசியம் ! சுதேசியம் !! எனத் துடித்தார்கள்—துடித்து வருகிறார்கள். மகாத்மாகாந்தியடிகள் தேவ வாக்காய்ச் சொல்வதுமிதே. நம் நாடு க்ஷேமமுற வேண்டுமானால், சுதேசியம் கைக்கொள்மின் என்கிறார். பூரண சுதேசியம் கொண்டுவிடாவிடினும் முதல் உடை பற்றியேனும் சுதேசியம் கொண்டால் அதுவே நாட்டின் க்ஷேமத்தை நல்கிவிடும் என்கிறார். அப்பெரியார் சொல்லின் உண்மையையறிந்து நம்மிந்தியாவில் முன்னர் உள்ள வழக்கப்படி கையால் நூற்று, கையால் நெய்த உடுப்பும் கதர்த்துணிகளை உடுத்திவருகிறார்களெனினும் இன்னும் பூரணமாயதில் இறங்கிவிட்டார்களென்று கூறுவதற்கில்லை. அன்னியத்துணிமயக்குஇன்னும் இருந்தே வருகிறது. தற்போதிய நிலைமையைப் பொறுத்த மட்டிலும் கதர்த்துணியாலாய பயன் விளங்காமலில்லை. கதர் மயம்பூரணத்துவமாகும் காலத்தில் நாட்டின் க்ஷேம நிலை நன்கு புலனாகும். கதரபிவிர்த்தியினால் ஏழைஜனங்களுக்கு பசிப்பிணி மாறுகிறது. அவர்கள் இத்தொழில் ஈடுபாடு கொண்டு ஜீவனம்சம் கொள்ளவும், தேச மக்கள் துணியிலிடும் செலவு மட்டுப்படவும் ஏது கரமாயிருக்கிறது. எனவே சகோதரா வாஞ்சைமேலீடுகொண்டு காந்தி மகான் உபதேசப்படி கதர்த்துணி கட்டிக் கொள்ள எல்லோரும் ஒரு மனப்படல் வேண்டும். இவ்வழியில் . தேசம் ஒரு முகப்பட்டு க்ஷேமம் எய்தலோடு, படிப்படியே சகல துறைகளிலும் பூரணச் சுதேசியங்கொண்டால் நம் புராதன இந்தியப் பெருமைவிளங்கும். இந்தியர் இந்தியரே என்பதும் அப்போது தான். ஆகையால் நாம் அனைவரும் சுயதேசப் பற்றுடைத்தோராய் சுதேசியங் கைக்கொண்டு தேசம் பொறுத்த மட்டில் நம்மைத் தூய்மைப்படுத்திஇந்தியாவின் எதிர் கால க்ஷேமத்தை நாடி நிற்போமாக.

ஓர் சுதேச அபிமானி.

## செய்தித் திரட்டு.

பிரபல மிராசுதாரும், சென்னை சட்டசபை அங்கத்தினரும், மந்திரி கக்ஷியின் பிரதம விப்பும், நாடார்மகாஜன சங்க உப தலைவருமான பட்டிவீரன்பட்டி ஸ்ரீமான் ஊ. பு. அ. சௌந்தரபாண்டிய நாடாரவர்கள், தமது திருக்குமாரர்களான தீனதயாளமூர்த்தி, ராஜேஸ்வரன் ஆகிய இருவரைக் கண்டிடிரனிட்டி காலேஜில் கல்வி பயில வைப்பதற்காகச் சென்னை லா காலேஜ் புரோபஸரும், சட்டசபை அங்கத்தினருமான ஸ்ரீமான் சிவராஜ் அவர்களுடன் வரும் மேமீ முதல் வாரத்தில் கண்டிக்குப் புறப்படுகிறார்கள்.

* *

மகாத்மா காந்தியின் சகோதரர் குமாரர் ஸ்ரீமான் மகன்லால் காந்தியவர்கள் சுர வாய்ப்பட்டு பாட்னாவில் காலமாயினர்.

* *

பம்பாயில் ஒரு பஞ்சுத் தொழிற்சாலையில் தீ விபத் தேற்பட்டு 2000 மூடைகள் எரிந்து 2 லக்ஷம் ரூபாய்கள் நஷ்டம் விளைந்தது.

* *

பங்கூராவிலும், அதைச் சுற்றிலும் கொடும் பஞ்சம் நடக்கிறது. 70,000 ஜனங்கள் தவிக்கின்றார்கள். 20,000 நெசவுக்காரர்கள் தங்கள் சாமான்களுக்கு விற்பனை யில்லாமல் தவிக்கிறார்கள். ஜில்லா மாஜிஸ்ட்ரேட் பண உதவிக்கு வேண்டுகோள் வெளியிட்டிருக்கிறார். நாளொன்றுக்கு 1000 பேர்களுக்குப் படி கொடுக்கப்பட்டு வருகிறது.

* *

மகாத்மா காந்தி இவ் வருடம் ஐரோப்பா செல்ல வேண்டு மென்று கொண்டிருந்த யோசனையை மாற்றி செல்வதில்லை யென்று தீர்மானித்து விட்டார்.

* *

ஆப்கன் அமீர் அமனுல்லகான் பாரசீகத்திற்கு 10—6—28-ல் விஜயஞ் செய்வார். அவரை வர வேற்பதற்கான ஏற்பாடுகள் இப்போதே நடந்து வருகின்றன.

* *

இந்தூர் மகாராஜாவும், அவரது அமெரிக்கா மனைவியும் ஐரோப்பாவுக்குப் பிரயாணமாகி யிருக்கிறார்கள்.

* *

வங்காளத்தில் "அகில இந்திய தேசபந்து ஞாபகச் சின்ன நிதி" க்கு இதுவரையில் ரூபாய் 60,000—0—0 வசூலாகி யிருக்கிறது.

* *

திருநெல்வேலி ஜில்லா இடையன்குளத்தில் பொன்னுச்சாமி நாடாருக்கும், அவர் தம்பி பால்சாமி நாடாருக்கும் மனஸ்தாப மிருந்து வந்தது. ஒரு நாள் பால்சாமி நாடார் பொன்னுச்சாமிநாடாரிடம் தனக்குத் தர வேண்டியிருக்கும் 14 அணுப் பாக்கியைக் கேட்கையில் வழக் குண்டாகி தமையனார் தம்பியைக் குத்திக் கொன்று விட்டார். இவ் வழக்கு திருநெல்வேலி ஸெஷன் ஜட்ஜ் மிஸ்டர். ஸ்டோபர்ட் அவர்களால் விசாரிக்கப்பட்டு எதிரிக்குத் தூக்குத் தண்டனை கிடைத்தது.

* *

சிந்து நதியில் திடீரென்று வெள்ளப் பெருக் கெடுத்து விட்டதால் சுக்கூர் அணைக் கட்டு வேலை செய்துகொண்டிருக்கு மிடத்தில் சுமார் 3 லக்ஷம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு அவ் வேலையும் தடைப்பட்டு விட்டது.

* *

பர்தோலியாவில் வரி கொடா வியக்கச் சத்தியாக்கிரகம் மும் முரமாய் நடைபெற்று வருகிறது. சர்க்கார் ஜனங்களின் நிலங்களை ஜப்தி செய்து வருகின்றனர்.

* *

சமீபத்தில் இந்தியப் பயில்வான் காமாவுடன் மல் யுத்தம் செய்து தோல்வியடைந்த போலந்து பயில்வான் ஜிப்ஸ்கோ இப்போது அமெரிக்காவில் இருக்கிறார். அவர் 60 ஆயிரம் ரூபாய் பந்தயங் கட்டி 3 மல் யுத்தங்களில் தன்னுடன் போட்டி போடும்படி காமாவுக்குத் தந்தி யனுப்பி யிருக்கிறார்.

* *

திருவாங்கூரில் திருவல்லா எனும் ஊரில் ஒரு வீட்டில் க்ஷேமிக்க வைக்கப்பட்டிருந்த வாணங்களில் தீப் பட்டு அவை யனைத்தும் எரிந்து ஒரு பெண்ணும் தீயி லகப்பட் டிறந்து போனாள்.

## சத்தியாக்கிரகத்திற்குத் தயாராகவேண்டும்.

காங்கிரஸ் வாதிகளும், சுயராஜ்யக் கக்ஷியாரும், திராவிடக் கக்ஷியாரும் மிதவாதிகளும், சுயேச்சைக்கக்ஷியாரும் வெளிப்படையாய் சமத்துவத்தையே பிரதானமாகக் கருதி இந்துமதஸ்தர்கள் எவரும் சகல இந்து ஆலயங்களிலும் சுவாமி தெரிசனம் செய்யலாமென்று உள்ளன்போடு முறையிடும் போது, பார்ப்பனர்கள் மட்டும் மவுனம் சாதித்திருந்தபோதிலும், அவர்களுக்கும் அது விஷயத்தில் ஆக்ஷேபனையிராதென்பது எமது நம்பிக்கை. (உண்டேல் வெளியிடலாம்.) ஆனால் சிலர்மட்டும் யாதொரு ஆதாரமுமின்றி நீடித்தகாலமாய் கோவில் சொத்துக்களைத் தங்களது பிதிர் ராஜ்ஜித சொத்துக்களாய் மதித்து, கோவில் நிர்வாகப் பதவிகளை ஒப்புக்கொண்டு நடத்திவரும் கோவிலுக்குள் நடக்கும் அக்கிரமங்களையும், அதர்மங்களையும் பிறர் அறியக்கூடாதென்ற கெட்ட எண்ணமுடையவர்களாயும், கோவில் வருமானங்களைத் தாங்கள் உபயோகிப்பதைப் பிறர் அறியாமலிருக்கும்படியாயும் சில வகுப்பார்கள் மட்டும் கோவிலுள் சில பாகங்களில் பிரவேசிக்கலாமென்றும், சில வகுப்பார்கள் பிரவேசிக்கக்கூடாதென்றும், முக்கியமான இடங்களில் பார்ப்பனர்களைத் தவிர வேறு எவரும் பிரவேசிக்கக் கூடாதென்றும், அவ்விதம் வேதம் முறையிடுவதாயும் புன்மொழிகளால் ஜனங்களை யேமாற்றி நம்மை மதியாது இறுமாப்புடனிருக்கிறார்கள். இவர்களுக்கு நற்புத்தி புகட்டியும் இதுவரையில் யாதொரு பிரயோஜனமும் நியாயமும்ஏற்பட்டதாய்த்தெரியவில்லை. ஆகையால் நம்மைக் கோவிலுள் பிரவேசிக்கக் கூடாது என்று தடைசெய்வதால் நின்றுவிடுவோம் என்று இது காறும் நினைத்திருந்த அன்னவர்களுக்கு அவர்கள் செய்கை நியாய விரோதமும், ஆதாரமற்றதுமாகுமென நற்புத்தி இன்னமும் கூடுமானவரையில் புகட்டுவோம். அதற்கும் இணங்காவிட்டால் சத்தியாக்கிரக முறை கொண்டே ஆலயச் சமத்துவம் அடையவேண்டும். இவ்வழியில் நாம் நம்மைத் தயார் பண்ணிக்கொள்ள வேண்டுமாதலால் க்ஷத்திரிய வீரத்துடன் அருப்புக்கோட்டையில் 1928-ம் ஸ்ரீ ஜூலை மாதத்தில் நடைபெறப் போகும் நாடார் தொண்டர் மகாநாட்டிற்கு விஜயம்செய்து தங்களைத் தொண்டர்களாகப் பதிவுசெய்து கொள்ளுமாறு நாடார் கனவான்களை நாடார் தொண்டர்படை சேனாதிபதி எஸ். கே. ராமசாமி நாடார் நாகபட்டணத்திலிருந்து கேட்டுக்கொள்ளுகிறார்.

---

திருவனந்தபுரத்தில் அடிக்கடி சித்தப் பிரமை யடையும் வழக்க முள்ள ஒரு தொழிலாளி வெறி பிடித்த சமயத்தில் தமது மனைவியைக் கொன்றுவிட்டு, புத்தி சுவாதீனம் வந்த போது தற் கொலை செய்ய முயற்சிக்கத் தடுத்து விட்டார்கள். போலீஸார் விசாரணை நடந்து வருகிறது.

* *

விந்து மாகாணத்தில் பல விடங்களில் மண் மாரியும், புயலும், மழையும் அகோரமாய் அடித்திருக்கின்றன.

* *

மகாத்மா காந்தி ஐரோப்பா போவதை நிறுத்தி விட்டு பர்மாவுக்கு வைத்திருந்த பிரயாணமும் மகன்லால் காந்தி மரணத்தால் தடைப்பட்டு விட்டது.

* *

கல்கத்தாவைச் சேர்ந்த கானிங் டவுனில் ஒரு படகு 100 பிரயாணிகளுடன் போய்க் கொண்டிருக்கையில் அளவுக்கு மிஞ்சின ஆட்கள் ஏறி யிருந்த காரணத்தால் அது கவிழ்ந்து போக 10 பேர்கள் மூழ்கி மாண்டனர்.

* *

நமது மன்னர் பிரானால் சட்ட மெம்பராக அங்கீகாரம் செய்யப்பெற்ற திவான் பகதூர் ஸ்ரீமான் எம். கிருஷ்ண நாயரவர்கள் 25—4—28—ல் பிற்பகலில் தமது வேலையை ஒப்புக் கொண்டார்.

## உள்ளூர்ச்செய்திகள்.

### ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவில்

அருப்புக்கோட்டை நாடார்கள் சிவாலயச் சுற்றுப் பிரகார உட்புறத்தில் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவில் கட்டி முடிக்கப் பெற்று நாளிது சித்திரை மீ 14 ௳ கும்பாபிஷேகம் நிறைவெய்தியது. கும்பாபிஷேக வைபவம் வெகு கோலாகலமாயிருந்தது.

ஃ ஃ ஃ

### ஸ்ரீ ஸர். பி. தியாகராஜ செட்டியாரவர்களின் 3-வது வருஷாப்திகக் கொண்டாட்டம்.

பிராமணரல்லார் முன்னேற்றத்திற்காகப் பெரிதும் பாடு கொண்டுழைத்துப் புகழுடம் பெய்திப் பொன்னுலகு போந்துள ஸ்ரீ ஸர். பி. தியாகராஜ செட்டியாரவர்களின் 3-வது வருஷாப்திகக் கொண்டாட்டம் 28-4-28ல் சொக்கலிங்கபுரம் தேவாங்கர் வாலிபர் சங்கங்களின் ஆதரவில் தேவாங்கர் பெரிய பள்ளிக்கூடத்தில் ஹை ஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஸ்ரீமான் எஸ். நாகலிங்கம் செட்டியாரவர்களின் தலைமையின்கீழ் வெகு விமரிசையாய் நடைபெற்றது. அவ்வமயம் ஸ்ரீ தியாகராஜ செட்டியாரவர்களின் ஜீவிய சரித்திரத்தைப்பற்றியும், தமிழ் மக்களின் தற்கால நிலைமையைப்பற்றியும், ஸ்ரீமான்களான "நாடார் குல மித்திரன்" பத்திராதிபர் கு. ஆ. முத்துநாடாரவர்களும், இ. கருப்பையாபிள்ளையவர்களும், வெள்ளையா செட்டியாரவர்களும் விளக்கமாயும் வெகு உருக்கமாயும் பேசினார்கள்.

ஃ ஃ ஃ

### சாலியர் மகாஜன 1-வது மகாநாடு.

சாலியர் மகாஜன 1-வது மகாநாடு ஏற்கனவே செய்துள்ள ஏற்பாடுகளின்படி நேற்றையதினம் (29-4-28) குறிப்பிட்ட நேரத்தில் நாகர்கோவில்—வடசேரி ஸ்ரீமான் அனந்தபெருமான் நாகனார் அவர்களால் திறந்துவைக்கப் பெற்று, நாகர்கோவில் முனிஸிபல் சேர்மன் ஸ்ரீமான் ஏ. நாயனார், பி. ஏ. பி. எல் அவர்கள் தலைமையின் கீழ் ஆரம்பித்து முதல் நாள் நடவடிக்கைகள் முடிவெய்தின. மகாநாட்டுக்கு வெளியூர் உள்ளூர் பிரமுகர்களுள் பட சுமார் 400 பேர்கள் விஜயஞ்செய்திருந்தனர். 2-வது நாள் நடபடிக்கைகள் இன்று நடைபெறும்.

---

### தொவுஞ்சை நாடார்களின் ஒற்றுமை.

பர்மா தேச தொவுஞ்சை நகர் நாடார் பெரு மக்கள் சில காலமாக ஒற்றுமையின்றிப் பொதுக் காரியங்களில்நாட்டம் கொள்ளாமல் இருந்து வந்தார்கள். இது பற்றி நம் மித்திரனதிபரவர்களுக்கு முறையீடு செய்து கொண்டதில், ஒற்றுமை ஆக்கம் குறித்து அவர்களை வேண்டுதல் செய்து பொதுக் காரியாதிகளைக் கவனித்து நம் குலாபிவிர்த்தியைக் குறிக் கோள் கொள்ளுமாறு இரு முறை மித்திரனில் குறிப்புகள் வெளியிட்டுள்ளார். அவற்றின் பயனாய் ஷையூர் மேன்மை தங்கிய உறவின் முறை நாடார்கள் உணர்ச்சி மேலீடு கொண்டு அனைவருள்ளும்ஐக்கியம் நிலவி பொதுக் காரியக் கவனிப்பில் முனைந்து ஸ்ரீமான் அம்பலம். தவசிப்பெருமாள் நாடாரவர்கள் தலைமையின் கீழ் 17—4—28-ல் கூட்டம் கூடி அடியிற் கண்ட தீர்மானங்களை நிறைவேற்றினர்.

1. பத்திர காளியம்மன் ஆலயப் பண்டுப் பணத்தைத் தக்க விடத்தில் வட்டிக்கு ஒப்படைக்க வேண்டும்.
2. பொதுக் கட்டடங்களின் செப்பனீடுக்கு ரூ 400—0—0 ஒதுக்கி வைக்கப்படல் வெண்டும்.
3. பத்திர காளியம்மன் கோவில் கட்டடம் கட்டி முடிக்கத் தலைக்கட்டு ஒன்றுக்கு வரி 11—0—0 வீதம் வாங்க வேண்டும்.

மேற் கண்ட தீர்மானங்கள் நிறைவேறிய பின்னர் அவற்றைக் கிரியாம்சத்தில் கொண்டவர்களாய்ச் சந்தோஷத்துடன் சபை கலைத்துச் சென்றனர் என்று ஷையூர் ஸ்ரீமான்களான வி. எஸ். கே. தங்கப்ப நாடார், எ. ஆர். வி. பொன்னையா நாடார் ஆகிய இருவர் எழுதுகின்றார்கள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## நாடார் பரிபாலன சங்கம், செந்தில், கோலாலம்பூர்.

### வருஷாந்திரப் பொதுக் கூட்டம்.

சென்ற மார்ச்சு மீ 24-ம் தேதி பகல் 3-மணிக்குச் சங்கக் கட்டடத்தில் மகா-ள-ள-ஸ்ரீ சி. சாமுவேல் நாடார் அவர்கள் தலைமையின் கீழ் கூட்டம் ஆரம்பித்தது. கூட்டத்திற்கு ஆஜராயிருந்த அங்கத்தவர்களின் தொகை சுமார் நூறு. அக்கிராசனாதிபதி ஸ்ரீமான் சி. சாமுவேல் நாடாரவர்கள் பெருத்த கரகோஷத்தினிடையே அக்கிராசனம் வகித்துப்புஷ்பஹாரம் சூட்டப்பட்டார்கள். தலைவர் முகவுரையில் கூடியிருந்த எல்லோருக்கும் நன்றி கூறினதோடு, வெகுஉற்சாகத்தோடு வெளியூரிலிருந்து வந்த பிரமுகர்கள் விஜயமானதைக் குறித்துச் சிலாகித்துப் பேசி அவர்களின் தளரா ஊக்கத்தை நன்குமதித்துப் புகழ்ந்தனர்.

கடந்த 5-3-27-ல் கூடிய வருஷப் பொதுக்கூட்டத்தில் நடந்த நடபடிக்கைகள் காரியதரிசி ஸ்ரீமான் வேதமுத்து அவர்களால் வாசிக்கப்பட்டது. இந்நடபடிக்கைகளை அங்கத்தினர் ஒப்புக்கொள்ளுமுன் சபாநாயகர்ராத்திரிப் பள்ளிக்கூடம் முயற்சி செய்தும், மாணக்கர் சேராததினால் நிறுத்தப்பட்டதாகவும், இரண்டாவது தர்க்க சம்பாஷணையும் மெம்பர்களின் ஆஜர்க்குறைவினால் அவ்விதமே நிறுத்தப்பட்டதென்றும் விவரித்துக்கூறினர். மேலும், கடந்த வருஷ அறிக்கையின்மீதுசங்கவேலைகள் சில அசந்தர்ப்பங்களினால் சற்றுக்குறைவடைந்ததையிட்டு தமது மனவருத்தத்தைக்காட்டினர். நிர்வாக அங்கத்தினர்களின் மாறுதலாலும் முக்கியமாய்ச் சங்கக்கட்டடக்குறைவினாலும் இவ்வாறு நேரிடவிருந்ததென்று கூறினர். பின்னால் கடந்த வருஷப் பொதுக்கூட்ட நடபடிக்கைகளையும் வரவு செலவு கணக்குக்களையும் ஒப்புக்கொள்ளலாம் என்று ஸ்ரீமான் ஜே. எம். டேவிட் அவர்கள் பிரரேபிக்க ஸ்ரீமான் பி. வி. சாமுவேல் அவர்கள் ஆமோதிக்க ஏக சம்மதத்துடன் ஒப்புக்கொள்ளப்பட்டது.

### சங்க உத்தியோகஸ்தர்கள்.

ஸ்ரீமான் சி. சாமுவேல் அவர்கள் தான் சபாநாயகராகக் கடந்த 3-வருஷங்களாக இருந்திருப்பதினால், இப்பதவியை மற்றெவரும் ஒப்புக்கொண்டால் நலமென்று காண்பதாகவும், சில அசந்தர்ப்பங்களினால் கடந்த வருஷம் தாம் சங்கத்திற்காக அதிக உழைப்பெடுக்கவில்லை என்றும் தெரிவித்துத் தான் அப்பதவியை விட்டு நீங்க உத்தேசிப்பதாய் அறிவிக்க ஸ்ரீமான் ஜே. எம். டேவிட் அவர்கள் ஏகசம்மதமாய் நியமுகம் பெற்றனர்.

பின் உப சபாநாயகராக ஸ்ரீமான் பெருமாள் நாடாரவர்களும், காரியதரிசியாக ஸ்ரீமான் சி. எ. ஞானமுத்து நாடார் அவர்களும், பொக்கிஷதாராக ஸ்ரீமான் மகாலிங்க மூர்த்தி நாடாரவர்களும் ஏகசம்மதமாய் நியமுகம் பெற்றார்கள்.

### நிர்வாகசபை அங்கத்தினர்கள்.

ஸ்ரீமான்கள் சி. சாமுவேல் நாடார், பி. டி. ராஜமணிநாடார், ஜி. எஸ். டி. தாசன்நாடார், ஏ. சி. ஜான்நாடார், எ. வேதமுத்துநாடார், இ. எ. சாமுவேல்நாடார், டி. வேதநாயகம் நாடார் ஆகியவர்கள் ஏகசம்மதத்துடன் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

வெளியூர் மெம்பர்களாக ஸ்ரீமான்கள் ஏ. வி. பொன்னுசாமி நாடாரவர்கள் மூவார் பகுதிக்கும், எம். பாலையாநாடாரவர்களும், பெரியநாயகம் நாடாரவர்களும் ஈப்போ பகுதிக்கும், வேதமணி நாடாரவர்கள் போர்ட்ஸ்வெற்றின்ஹாம் பகுதிக்கும், ஸ்டீபன் அவர்கள் செரம்பான் பகுதிக்கும், கோவிந்தசாமிநாடாரவர்கள் ஜோகூர் பகுதிக்கும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

கணக்குப் பரிசோதனைக்காரர்களாக ஸ்ரீமான்கள் கே. வேதமாணிக்கம் நாடாரும், பி. வி. சாமுவேல் நாடாரும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். உத்தியோகஸ்தர்கள் தெரிந்தெடுத்த பின் சிற்றுண்டி, தேப்பானம் வெகு ஒழுங்காகப் பரிமாறப்பட்டன.

### கட்டட நிதி.

இந்நிதிக்கு வாக்குக்கொடுத்ததொகை அதாவது மாத வருமானத்தில் நூற்றுக்குப் பத்து அங்கத்தினர்கள் அதிகமாகக் கொடுத்துவரவில்லை என்றும் அப்படிக்கொடுத்து இந்நிதியை நன்னிலைமைக்குக் கொண்டுவர ஒவ்வொரு அங்கத்தினரும் முயற்சிப்பதவசியமென்றும், சங்கக் கட்டடத்திற்கு ஓர் நிலம் சுருக்கில் வாங்க வேண்டுமென்றும் கடந்த வருஷத்து சபாநாயகர் ஸ்ரீமான் சி. சாமுவேல்நாடார் அவர்கள் பேசியதை ஆதரித்து ஸ்ரீமான் பெருமாள்நாடாரவர்கள் நமது சங்கத்திற்கு அத்தியாவசியமும் நிலவரமுமான சொந்த நிலமும் கட்டடமும் இன்றியமையாததென்று தெளிவாய்க்கூறி அப்படி நிர்வாக சபை அதற்கு வேண்டிய முயற்சிகளெடுத்துக் கூடிய சீக்கிரத்தில் நிலமொன்று வாங்கிக் கட்டடம் அமைக்கப் பிரயாசைப்படின் 3 மாதத்திற்கிடையில் தாமும் மூவார் ஸ்ரீமான்பொன்னுசாமி நாடாரவர்களும்ஆளொன்றுக்கு வெள்ளி 250 கொடுப்பதாய் வெகு உற்சாக மொழிகளுடன் வாக்களித்தனர். இன்னும் பாக்கித் தொகைகளை 3 மாதத்திற்குள் வசூலிக்க முயலவேண்டும் என்றும் பேசப்பட்டது.

### உபந்நியாசங்கள்.

உபந்நியாசகர் கனம் ஜே. எம். பாக்கியநாதன் ஐயரவர்கள் மரியாதையாக மாலையிடப்பட்டு, நிர்வாகசபையாரின் வேண்டுகோளுக்கிணங்கி "சங்கத்தின் நோக்கம்" என்னும் பொருளின் பேரில் சாங்கோப சாங்கமாய் உபந்நியாசித்தார். சங்கத்தினாலாய பலன்களை சவிஸ்தாரப்படுத்தி கைத்தொழில், விவசாயம், வியாபாரம் முதலியவற்றின் அபிவிர்த்திக்கும், தொழிலாளர் முன்னேற்றத்திற்கும் முயற்சிக்க வேண்டும் என்றும், சமூக முன்னேற்றத்திற்கு கல்வி அத்தியாவசியம் என்றும், நாம் இன்னும்தமிழ்க்கல்வியில்தேர்ச்சிபெற்று வியாசங்கள் பத்திரிகைகளுக்கு எழுதி முன்னுக்குவரவேண்டும்என்றும், கவிஞர்களாகியஔவையார்,கம்பர்,ஒட்டக்கூத்தர் இவர்களைப் பின்பற்றி கவிகள் எழுத அப்பியாசிக்கவேண்டும் என்றும், ராகத்தியானம், நல்நடக்கைகள், ஆசார சீர்திருத்தம், பொதுநன்மை இவைகளில் சீர்திருத்த வேண்டுமென்றும், நமது சுய குடும்பம், ஜாதி, தேசம் இவைகளைப்பற்றி அபிமானமுடையவர்களாயிருக்க வேண்டுமென்றும், கதர்த் துணியுடுத்தி நம் தேசத்திற்கு நன்மை அளிக்கும் கருவிகளாயிருக்க முயலவேண்டும் என்றும், இவ்வாறு நம் வாழ்க்கையின் எல்லாப்படிகளையும் சீர்ப்படுத்த வேண்டும் என்றும் விரிவாயும் விளக்கமாயும் பிரசங்கித்தார். பின்னால் புது அக்கிராசனாதிபதி ஸ்ரீமான் ஜே. எம். டேவிட் அவர்கள் அதை உறுதிப்படுத்தி ஔவையாரின் "வரம்புயர்" என்னும் செய்யுளை தாற்பரித்துச் சீர்திருத்த முறைகளை நாம் கைக்கொண்டு நடக்கவேண்டும் என்று பிரசங்கித்து ஐக்கியம், கல்வி என்பவை பற்றியும் உரைத்தார்கள்.

பின்னால் ஸ்ரீமான் பெருமாள் நாடாரவர்கள் "நம் மரபினரின் தற்கால நிலைமை" என்னும் விஷயமாய்ப் பேசி இதர ஜாதியாரின் தப்பபிப்பிராயங்களைப்பற்றியும் மனிதனாய்ப் பிறந்தவனெவனும் சம உரிமையுள்ளவன் என்றும், உயர்ந்த ஜாதியினர் தாழ்ந்த ஜாதியினர் என்று கருதாது, சமூக முன்னேற்றத்திற்கு யாவரையும் சமமாய் மதித்து நடத்தல் உசிதமென்றும் எடுத்துரைத்து இந்தியாவின் தேசியக் கட்சியினரைப்பற்றியும் எடுத்தியம்பினர்.

### பந்து விளையாட்டுப் பரிசு.

பேட்மின்ட்டன் எனும் பந்து விளையாட்டு டோர்னமென்ட்டில் வெற்றி அடைந்த பி. டி. ராஜமணிக்கு சங்கத்தின் பேரால்15 வெள்ளி பெறுமானஓர் தங்கமெடலும், மூவார்ஸ்ரீமான் பொன்னுச்சாமிநாடார் அவர்களால் இரண்டாவது வெற்றிக்குரிய ஸ்ரீ. வீரபத்திரனுக்குப் பத்து வெள்ளி பெறுமான வெள்ளியும் தங்கமும் கலந்த ஓர் மெடலும் கரகோஷக்க ளிப் பி டை டையே பரிசளிக்கப்பட்டன.

### போது விஷயம்.

பொது விஷயமாகப் பொக்கிஷதார் [illegible]

## நீதிச் சுரங்கம்.

நீலிக் கண்ணீருக்கு இரக்கங் காட்டுவதும், போலி வேடத்தில் நம்பிக்கை கொள்வதும், விரோதிகளின் சொற்படி நடத்தலும். தீமைக்கு விருந்து செய்வதற் கொக்கும்.

* *

உண்மை உழைப்பை மணந்த ஜெயத்திற்கு இன்பம், கீர்த்தி யெனும் சேய்கள் ஜனிக்கும்.

* *

தீமைகளெல்லாம் நம் மனதினால் உண்டாக்கப்பட்டு, நம்மையே நம்முள்ளிருந்து இரையாக்கி ஜீவ சக்தியைக் குறைத்துக் கொண்டே யிருக்கின்றன.

* *

அநேக யோசனைகள் உபகார வார்த்தைகள்கிடைக்குமிடத்தில் அரைக் காசுதான் உதவிக்குக் கிட்டும்.

* *

உதவி வேண்டிச் சென்றால் சுமார் நூறு பேர் யோசனை யுதவி புரிவர். பத்துப் பேர் சரீர உதவி செய்வர். ஒருவரே பண உதவி தருவர்.

* *

மேல் படி ஏறக் கீழ் படிதலே தேவை. வாழ்ந்து நிற்க வணக்கமே வழி. நற் பெயராகியவெகுமதியை மரியாதை நல்கும். அற்பப்பேச்சும், செய்கையும் கௌரவக் குறைவுக்குத் தோழன். அமைதி பெருமைக்கு மாதா.

* *

பண மில்லை; அதனால் காரியம் நடக்க வில்லை யென்று சொல்வதற்கில்லை. ஏனெனில் பண மிருந்தும் காரியம் நடை பெறாது போவதுமுண்டு.

* *

காரியம் நடை பெறப் பணம். விஷயம் நடைபெறாது தடுக்க அபிப்பிராய பேதச் சச்சரவு. இவை இரண்டிலும் அநேகமாய்ப் பின்னது தோல்வி யடைகிறதில்லை.

* *

கஷ்டங் கவலைகள் வந்தால் புகை வண்டித் தொடர்போ லொன்றின் பின் னொன்றாய்த் தொடர்ச்சியாய் வருகின்றன. இதுபோலவே சுகமும், யோக பலனும் புற்றினி லீசல்கள் கிளம்புவதுபோல் உதிக்கின்றன.

* *

சில கூடிப் போனால் குறைத்துக் கொள்ள இயலாதிருக்கிறது. வேறு சில குறைந்துபோனால் அதிகப்படுத்திக் கொள்வதரிதா யிருக்கிறது. சிலவை அதிகப் படுவதால் பயனின்றிப் போய் விடுகிறது. சிலவை கொஞ்சமாய் விடுவதால் உபயோகப்படாமல் போகிறது.

* *

இனிப்பு வார்த்தைகளால் ஆவலே உருவாய் எதிர்பார்க்க வைத்து இறுதியிலில்லை யென இயம்பி விடுவதற்கு, முதலிலேயே உண்மையை உணர்த்து விடுவது உயர்வை நல்கும்.

* *

இரு கட்சிக்காரர்களிடமும் இரு கரங்களையும் நீட்டி லஞ்சம் வாங்கிக் கொண்டு இருவர்க்கும் பாதக மில்லாமல் காரிய முடிக்கும் அதீத சாமர்த்திய சாலிகளின் புகைப் படங்களைக் கண் காட்சி சாலையில் வைத்தால் நலமாயிருக்கும்.

அ. கு. அண்ணாமலை.

---

கள்கூடியிருந்த சகலஅங்கத்தவர்களையும் சந்தாப்பாக்கிகளையும் கட்டட நிதிப் பாக்கிகளைத் தாமதிக்காது செலுத்த வேண்டுமென்று ஞாபகப்படுத்தித்துரிதமாய் நிலம்வாங்கிக் கட்டடத்தை வெகு விரைவில் கட்ட ஆரம்பிப்பது ஒவ்வொரு அங்கத்தினரின் நோக்கமாயிருந்து, சங்கத்தை முன்னேற்றத்திற்குக் கொண்டுவர முயற்சிப்பதவசியமான கடமையென்று எடுத்துக் கூறினர்.

பின்னர் தாம்பூலம், சந்தனம், பன்னீர், பரிமாறப்பட்டு அக்கிராசனாதிபதி ஸ்ரீமான் ஜே. எம். டேவிட் அவர்கள் கூட்டத்திற்கு வந்த யாபேருக்கும் ஆசி கூற மாலை 6-45-மணிக்கு வந்தனோபசாரத்துடன்கூட்டம்இனிது கலைந்தது.

ஜி. எ. ஞானமுத்து,

கௌர காரியதரிசி.

## காமப்பித்தனின் கதி.

நாளிது எப்ரல் மாதம் 19உ பட்டப் பகலில் பால ராமபுரத்திலிருந்து நாகர் கோவிலுக்கு மோட்டாரில் பிரயாணம் செய்து கொண்டிருந்த சுமார் 23-வயதுள்ள ஒரு வாலிபன் நாகர் கோவில் கனகமூலச்சந்தைக் கேட்டுக்குச் சமீபம் மோட்டார் வாகனத்தைவிட்டுக் கீழேயிறங்கினவுடன் சமீபத்தில் தண்ணீர் எடுக்கக் குடமேந்தி ரஸ்தாவில் நடந்து கொண்டிருந்த சுமார் 13-வயதுள்ள ஒரு கன்னிகையை "நீதான் என் பெண்" என்று சொல்லிக்கொண்டு மேற்சேலையைப் பிடித்திழுத்து சந்தைக்குவந்த திரளான ஜனக்கூட்டத்தில் வைத்து வழிமறித்துக்கொண்டான். இந்த அடாத செய்கையைக் கண்ணுற்ற ஜனங்கள் பலரும் ஓடிவந்து அவனை விலக்கி அவளை இரக்ஷிக்கப் பார்த்தார்கள். ஆயினும் அவன் பிடித்த பிடி விட்டபாடில்லை யென்று கண்டு அவனை கையப்புடைத்துக் கீழே தள்ளிவிட்டார்கள். அடியும் இடியும் பொறுக்கமாட்டாமல் எழுந்து அவன் ஓடத்தலைப்பட்டான், அவனை அறிந்த சிலர் அவனைப் பிடித்துக் கொண்டு வந்து மோட்டார் வாகனத்தில் வைத்துக் கட்டி ஊருக்கனுப்பி விட்டார்கள்.

அவன் வரலாற்றை முற்றிலும் விசாரித்ததில் ஏதோ சில காதற் கதைகளையும், காம நூல்களையும் சின்னாட்களாகப் படித்து வந்ததாகவும், அதன் பயனாய் திடீரென்று இவ்வாறு காம வெறி கிளம்பிவிட்டதாகவும், வீட்டிலிருந்து புறப்படும்போது புத்திக்கு யாதொரு சீர்கேடுமிருந்ததில்லை யென்றும் சொன்னார்கள். மனதடக்கமின்றி காதற் கதைகள் வாசிப்பது இம்மாதிரி விபரீதத்திலேயே கொண்டு வந்து விடும்.

ஸி. தங்கையாநாடார்,

தென் திருவிதாங்கூர்.

---

## சீனாவில் எலிகளின் யுத்தம்.

கலகானுக்கு வடமேற்கேயுள்ள சுவியன் ஜில்லாவில் சமீபத்தில் மஞ்சள் எலிகளுக்கும் கருப்பு எலிகளுக்கும் நடந்த ராக்ஷசப் போரைக் குறித்து பாரிஸ் பத்திரிகை யொன்றின் சீன நிருபர் பின் வருமாறு எழுதுகின்றார்:—

ஒரு நாளிரவு திடீரென்று ஷலாச்சி கிராமவாசிகள் விபரீதமான கூச்சலும் சத்தமும் கேட்டு வெளியே வந்து பார்க்கையில்தெருவில்ஆயிரக்கணக்கான மஞ்சள், கருப்பு நிற எலிகள் செத்துக் கிடப்பதையும், மற்றும் பல ஆயிரக் கணக்கான எலிகளின் படைகள் கடும் போர் புரிவதையும் கண்டு அளவற்ற ஆச்சரியமடைந்தனர். மஞ்சள் நிற எலிகள் தெற்கேயிருந்து வந்து நகரிலுள்ள கருப்பு எலிகளுடன் போர் தொடங்கியதாகத் தெரிகிறது. எலிகள் பெரும் ராணுவங்களைப்போல் பல ஆயிரக்கணக்காகக்கூடிச் சண்டையிட்டதால் தெருக்களிலும், ரஸ்தாக்களிலும் எங்கும் எலிகளின் பிணக்குவியல்கள் நிறைந்துவிட்டன. தெருக்களிலிருந்து ஆறுவண்டிகள் நிறைய செத்த எலிகளை வாரிக் கொண்டு போகப்பட்ட பின் பட்டப் பகலில் மஞ்சள் எலிப்படைகள் திரும்பி வந்து மீண்டும் யுத்தம் தொடங்கின. யுத்தம் செய்யும் எலிக்கூட்டங்கள் பகல் வெளிச்சத்தையாவது அருகில் ஜனங்கள் கூடி வேடிக்கை பார்த்து நடமாடுவதையாவது சற்றும் பொருட்படுத்தவில்லை. இரண்டாவது யுத்தத்திலும் ஆயிரக்கணக்கான எலிகள் கொல்லப்பட்டன. இதற்குள் அவற்றிற்கே ஏதோ புத்தி வந்து இக்கடும் போர் திடீரென்று நிறுத்தப் பட்டிராவிடில் சீனத்தில் எலிகளே அற்றுப் போயிருக்கக் கூடுமென்றும், மற்றவை வேகிறங்காவது [illegible]க்குமென்றும் [illegible].

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரஹம்.

மகாத்மா காந்தி எழுதியது.

### ஏழாம் அத்தியாயம்.

#### 2. வெள்ளைக்காரர் சீற்றம்.

இவ்வாறு நேட்டால் வெள்ளைக்காரர்கள் மனக் கொதிப்படைந்திருந்த காலத்தில் 'கோர்லாண்டு' கப்பலில்நான் என் குடும்பத்துடன் திரும்பி வருவதாகவும், அச்கப்பலில் 300–400 இந்தியப் பிரயாணிகளும் வருவதாகவும், அதே சமயத்தில் ஏறக்குறைய அவ்வளவு இந்தியர்களுடன் 'நாடேரி' என்னுங்கப்பலும் வருவதாகவும் கேள்வியுற்றார்கள். இது அவர்களுடைய கோபத்தணலில் நெய் வார்த்தது போலாயிற்று. உடனே பெருங் கிளர்ச்சி எழுந்தது. நேட்டால் வெள்ளைக்காரர்கள் பெரிய கூட்டங்கள் நடத்தினார்கள். வெள்ளைக்கார சமூகத்தின் பிரமுகர்கள் அநேகமாக எல்லாரும் அக்கூட்டங்களுக்குச் சென்றார்கள். பொதுவாக இந்தியப் பிரயாணிகளும், சிறப்பாக நானும் பலமாகக் கண்டிக்கப்பட்டோம். 'கோர்லாண்டு', 'நாடேரி' கப்பல்களின் வருகை "நேட்டால் மீது படையெடுப்பு" என்பதாகக் கூறப்பட்டது. அந்த எண்ணூறு பிரயாணிகளையும் நானே நேட்டாலுக்குக் கொண்டு வருவதாகவும், நேட்டாலைச் சுதந்திர இந்தியர்களின் மயமாக ஆக்கி விடுவதற்கு இஃது என்னுடைய முதல் முயற்சி என்பதாகவும் சொல்லப்பட்டது. நாலுன்பட அவ்விரண்டு கப்பல்களிலும் வந்த பிரயாணிகளை நேட்டாலில் இறங்காமல் தடுத்துவிடவேண்டுமென்று தீர்மானங்கள் செய்யப்பட்டன. நேட்டால் அரசாங்கத்தார் பிரயாணிகள் இறங்காமல் தடுக்காவிட்டால், அல்லது அவர்களால் தடுக்க முடியாவிட்டால், பொதுக்கூட்டத்தில் நியமிக்கப்பட்ட கமிட்டியாரே தலையிட்டுப் பலாத்காரத்தினாலேயே இந்தியர்கள் இறங்காமல் தடுத்தல் வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. இருகப்பல்களும் ஒரே நாளில் டர்பன் துறைமுகம் அடைந்தன.

#### அதிகார துஷ் பிரயோகம்.

இந்தியாவில் பிளேக் என்னும் மகாமாரி நோய் 1896-ம் ஆண்டில் முதன் முதலாகத் தோன்றிற்று என்பது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். எங்களை இறங்காமல் தடுக்க நேட்டால் அரசாங்கத்தார்க்குச் சட்ட சம்பந்தமான கஷ்டங்கள் இருந்தன. குடியிறக்கத் தடைச் சட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. மற்றப்படி அவர்களுடைய அநுதாபம் முழுதும் மேற்கூறிய வெள்ளைக்காரர் கமிட்டியின் பக்கமே இருந்தது. மந்திரிசபையில் ஒருவரான காலஞ்சென்ற மிஸ்டர் எஸ்கோம்ப் அக்கமிட்டியின் நடவடிக்கைகளில் முதன்மையாகக் கலந்துகொண்டார். அந்நடவடிக்கைகளுக்குத் தூண்டுதல் அளித்தவர் அவர்தான். கப்பலில் தொத்து நோய் தோன்றியிருந்தாலும், அல்லது தொத்துநோயுள்ள ஒரு துறைமுகத்திலிருந்து அது கிளம்பியிருந்தாலும் சிறிது காலத்திற்குப் பிரயாணிகளை இறக்காமல் வைத்திருந்து பரிசோதித்த பின்னரே இறக்க வேண்டுமென எல்லாத் துறைமுகங்களிலும் ஒரு விதி அமுலிலிருக்கிறது. இந்த ஏற்பாட்டுக்குக் 'குவாரண்டைன்' என்று பெயர். சுகாதாரக் காரணங்களின் மீது துறைமுக சுகாதார உத்தியோகஸ்தரே இந்நிர்ப்பந்தம் விதிக்கலாம். நேட்டால் அரசாங்கத்தார் தங்கள் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து மேற்படி விதியை அரசியல் காரணத்துக்காக உபயோகப்படுத்தினார்கள். கப்பலில் தொத்து நோய் ஏதும் இல்லாதிருந்தும், குறிப்பிட்ட கால அளவுக்குமேல், சுமார் 23 நாள்வரை இரண்டு சப்பல்களும் நிறுத்தப்பட்டிருந்தன. இதற்கிடையில், வெள்ளைக்காரக் கமிட்டியார் தங்கள் வேலையை நடத்திக் கொண்டிருந்தார்கள். 'கோர்லாண்'டின் சொந்தக்காரரும், 'நாடேரி'யின் ஏஜண்டுகளுமான தாதா அப்துல்லா கம்பெனியாரை அவர்[illegible]

படுத்தினார்கள். பிரயாணிகளைத் திருப்பி அனுப்பி விடுவதற்கு அவர்களுக்குப் பலவகை ஆசைகள் காட்டப்பட்டன. அப்படிச்செய்ய மறுத்தால் அவர்கள் வியாபாரம் போய்விடுமென்று பயமுறுத்தப்பட்டது. ஆனால் மேற்படி கம்பெனியின் கூட்டாளிகள் கோழைகள் அல்லர். தொழில் அழிந்து போனாலும் தங்களுக்குக் கவலையில்லை என்று அவர்கள் கூறினார்கள். இறுதிவரை போராடிப் பார்த்து விடுவோமேயல்லாது, குற்றமற்றவர்களான அந்த ஏழைப் பிரயாணிகளைத் திருப்பியனுப்பும் குற்றத்துக்காளாக மாட்டோமென்று அவர்கள் உறுதிகூறினார்கள். அவர்கள் தேசபக்தியறியாத மக்கள் அல்லர். கம்பெனியின் பழைய வக்கீலான மிஸ்டர் லாப்ஸ்டனும் தீர புருஷர்.

#### பிரயாணிகளின் உறுதி.

அதிஷ்ட வசமாக ஸ்ரீ மனு சுக்லல் நாஸார் என்பார் இதே காலத்தில் தென்னாப்பிரிக்கா சேர்ந்திருந்தார். அவர் சூரத்தைச் சேர்ந்தவர். காயஸ்த வகுப்பினர். காலஞ்சென்ற நீதிபதி நானாபாய் ஹரிதாஸின் மருமகன். அவரை நான் அறியேன். அவர் தென்னாப்பிரிக்கா சென்றதும் எனக்குத் தெரியாது. 'நாடேரி,' 'கோர்லாண்டு' கப்பல்களின் பிரயாணிகளை அழைத்து வரும் விஷயத்தில் எனக்கு எவ்வித சம்பந்தமும் கிடையாது என்று சொல்ல வேண்டுவதில்லை. அவர்களில் பலர் தென்னாப்பிரிக்காவில் ஏற்னவே குடியேறியவர்கள். மற்றும் பலர் ட்ரான்ஸ்வாலுக்குச் செல்பவர். இந்தப் பிரயாணிகளுக்கும் வெள்ளைக்காரக் கமிட்டியார் பயமுறுத்தும் அறிக்கைகள் அனுப்பினார்கள். கப்பல் தலைவர்கள் அவ்வறிக்கைகளைப் பிரயாணிகளுக்குப் படித்துக் காட்டினார்கள். நேட்டால் வெள்ளைக்காரர்கள் மிகவுங் கோபங்கொண்டிருப்பதால் அபாயமான நிலை ஏற்பட்டிருக்கிறதென்றும், இந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தாது இந்தியப் பிரயாணிகள் கரையில் இறங்கும் பட்சத்தில், கமிட்டி அங்கத்தினர்களே துறைமுகத்துக்கு வந்து ஒவ்வோர் இந்தியனையும் கடலில் தள்ளிவிடுவார்களென்றும் அவ்வறிக்கைகள் திட்டமாகத் தெரிவித்தன. 'கோர்லாண்'டிலிருந்த பிரயாணிகளுக்கு நான் இவ்வறிக்கையின் பொருளை விளக்கிக் கூறினேன். 'நாடேரி' கப்பலிலும் ஆங்கில மறிந்தபிரயாணி ஒருவர் மற்றவர்களுக்குப் பொருள் தெரிவித்தார். இரு சப்பல்களிலுமிருந்த பிரயாணிகள் திரும்பிப் போகத்திட்டமாக மறுத்துவிட்டார்கள். தங்களில் பலர் ட்ரான்ஸ்வாலுக்குச் செல்வதாகவும், மற்றும் சிலர் நேட்டாலின் பழைய குடிகள் என்றும், சட்டப்படி கரையிலிறங்கத் தங்கள் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டென்றும், கமிட்டியின் பயமுறுத்தல்களுக்கு அஞ்சப் போவதில்லையென்றும், தங்களுக்குக் கரையிலிறங்க உரிமையுண்டா இல்லையா வென்பதை சோதிக்கும் பொருட்டு இறங்கியே தீரப்போவதாகவும் பிடிவாதமாகக் கூறிவிட்டார்கள்.

#### இறங்க அநுமதி.

நேட்டால் அரசாங்கத்துக்கு இப்போது என்ன செய்வதென்று தெரியவில்லை. அநியாயமான ஒரு நிர்ப்பந்தத்தை எத்தனை நாள் அமுலில் வைத்திருப்பது? ஏற்கனவே 23 நாட்கள் ஆகிவிட்டன. தாதா அப்துல்லாவும் சரி, பிரயாணிகளும் சரி பணியும் வழியாயில்லை. ஆகவே 23 நாளைக்குப் பிறகு கப்பல்கள் ஹார்பருக்குள் வர அநுமதிக்கப்பட்டன. இதற்கிடையில் மிஸ்டர். எஸ்கோம்ப் வெள்ளைக்காரக் கமிட்டியாரைச் சமாதானப்படுத்தினார். அவர்களுடைய கூட்டமொன்றில் அவர் சொன்னதாவது:—"உங்களால் கூடுமானவையெல்லாம் செய்துவிட்டீர்கள். [illegible] இந்தியர்கள் 23 நாள் நிறுத்திவைக்கப்பட்டார்கள். உங்களுடைய உணர்ச்சிகளையும், பொதுநலத்தில் அக்கறையையும் நன்கு வெளிப்படுத்தியிருக்கிறீர்கள். ஏகாதிபத்திய அரசாங்கம் கட்டாயம் அவற்றைக் கவனிக்கும். உங்கள் செயல் நேட்டால் அரசாங்கத்தின் வேலையை எளிதாக்கிவிட்டது. ஆனால் இப்போது ஓர் இந்தியப் பிரயாணியையேனும் பலாத்காரத்தினால் நீங்கள் இறங்க வொட்டாமல் தடுத்தீர்களானால், உங்களுடைய நலத்துக்கே கேடு விளைத்துக் கொள்வதுடன் அரசாங்கத்தையும் இரண்டுங்கெட்ட நிலையில் வைப்பீர்கள். அப்போதும் இந்தியர்கள் இறங்காதபடி செய்ய உங்களால் முடியாது. எல்லாப் பிரயாணிகள் மேலும் குற்றம் சொல்வதற்கில்லை. அவர்களில் ஸ்திரீகளும் குழந்தைகளும் கூட இருக்கிறார்கள். அவர்கள் பம்பாயில் கப்பலேறியபோது உங்கள் உணர்ச்சிகளை அறியார்கள். ஆதலின்நீங்கள் கலைந்து போய்விட வேண்டுமென்பது என் யோசனையாகும். அவர்களைத் தடைசெய்யவேண்டாம். ஆனால், நேட்டால்அரசாங்கத்தார்இனிமேல் குடியிறக்கத்தைத் தடுப்பதற்காகச் சட்டசபையினிடமிருந்து வேண்டிய அதிகாரங்களைப் பெறுவார்கள் என்று உங்களுக்கு உறுதி கூறுகிறேன்." இது மிஸ்டர். எஸ்கோம்பின் பேச்சின் சாராம்சமேயாகும். கூட்டத்தார் இதைக் கேட்டு ஏமாற்றமடைந்தனர். ஆனால் அவருக்கு நேட்டால் வெள்ளைக்காரரிடையே அதிக செல்வாக்கு இருந்தபடியால் அவருடைய புத்திமதியின்படி அவர்கள் கலைந்து போயினர். இரண்டு [illegible] போரம் வந்தன.

---

## தெய்வ பக்தியின் பெருமை.

(அருப்புக்கோட்டை ஜீவகாருண்யப் பிரசாரசபையின் 25-வது பிரசுரம்.)

பெரியோர்களே!

ஹிந்து மதத்தின் உண்மையை மேல் நாட்டுப் பிரசங்கமேடைகளிலும் நின்று கர்ஜித்த வீர சிங்க விவேகானந்தரின் சற்குருவாகிய ராமகிருஷ்ண பரமஹம்ஸரை, எல்லாம் வல்ல எம்பெருமாட்டி ஸ்ரீ பராசக்தியின் பாதாரவிந்தம் சேரும்படி செய்ததும், பிரம்மதேவனால் பதினாறு வயதென்று நிர்ணயிக்கப் பெற்ற மார்க்கண்டேயரை எமவாதனை நீக்கி என்றென்றும் பதினாறுவயதுடன் சிரஞ்சீவியாய் இன்புறுமாறு செய்ததும் மேன்மை பொருந்திய தெய்வ பக்தியன்றோ?

தரித்திர சொரூபியாகிய குசேல முனிவருக்கு அஷ்ட ஐஸ்வரியங்களைக் கொடுத்ததும், விபீஷணாழ்வாருக்கு இலங்காதிபதி பட்டத்தையும், சிரஞ்சீவி வாழ்வையும் அளித்ததும் பெருமை சார்ந்த அன்பு அல்லவா?

வள்ளலாராகிய சிபிச்சக்கரவர்த்தியார் வெற்றுடம்பை நீக்கி மோக்ஷவீட்டையச் சாதனமாயமைந்ததும், மகத தேசமன்னர் கௌதமருக்கு மூப்பு, நோய், மரணம் என்ற மூன்றுக்கும் ஔஷதமாய்த் தோன்றிபேரின்பம் ஈய்ந்ததும் தெய்வத்தன்மை பொருந்திய காருண்யம் அன்றோ?

நாம் கொண்டாடும் பொங்கல்களும் திருவிழாக்களும் நம்மைத் தெய்வபக்தியின் வழிநின்றொழுகச் செய்யும் சாதனங்களே.

தெய்வபக்தியின் வழி நின்றொழுகும் மாந்தர் ஒவ்வொருவருக்கும் அடிப்படையாய் விளங்குவது அன்புதான்.

அன்பின் ஒவ்வொரு அணுவிலும் ததும்பிக் கிடக்கும் பொருள் ஜீவகாருண்யமே!

ஆன்றோர்களே!

படக்காக்ஷி காணச்சென்றவர் தூங்கியெழுந்து வருவதுபோல் நாம் கொண்டாடும் பொங்கலிலும் திருவிழாவிலும் ஜீவகாருண்யம் அறவே அற்ற கொலை புரிவோமாகில் தெய்வபக்தியும் அதன் வயமாயுள்ள அன்பும் தத்தம் அம்சங்களை இழந்து பக்குவமாய்க் காய்ந்த பாலில் ஒரு துளி விஷம் சேர்ந்த உடன் குணம் மாறுவது போல் யாதொரு பயனுமின்றி வியர்த்தமாய் விடுகிறது.

ஆகையால் நாம் கொண்டாடும் பொங்கலுற்சவத்தில் பலியிடுவதை விடுத்து அன்பு பொருந்திய ஆராதனை செய்து நற்பயனை அடைவோமாக.

---

## தாசி—ஸ்ரீமதி சிவபாக்கியமம்மாள் வெற்றி.

இராமேஸ்வரம் யூனியன் போர்டு 3-வது வார்டு தேர்தல் நிகழும் ஏப்ரல் மாதம் 16-ம் தேதி நடைபெற்றது. போட்டி வெகு பலமாக இருந்தது. ஸ்ரீ. ரெ. நடராஜபிள்ளை, ஸ்ரீ. மு. முத்துக்கருப்பபிள்ளை, தாசி ஸ்ரீமதி. சிவபாக்கியமம்மாள், ஸ்ரீ. சு. முத்துக்கருப்பபிள்ளை ஆகிய நான்குபேர் அபேட்சகர்களாக நின்றதில், ரெ. நடராஜபிள்ளை விலகிக்கொண்டார். ஸ்ரீமதி. சிவபாக்கியமம்மாள் அதிக ஓட்டுகள் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஸ்ரீமதிசிவபாக்கியமம்மாள்தாசித்தொழிலில்ஈடுபட்டவராயிருந்தும்,தம்முடைய தர்மகைங்கர்யத்தினாலும்,நல்ல குணத்தாலும், பொதுஜனங்களால் போற்றப் பெற்றவராயிருந்ததனால், தேர்தலில் வெற்றி பெற்றார். ஸ்தல ஸ்தாபனத் தேர்தலில் ஒரு பெண் வெற்றியடைந்தது இது முதல் தடவையாயிருப்பதுடன், தாசிகளில்ஸ்ரீமதி சிவபாக்கியமம்மாள்தான்முதலில்ஆண்களைஎதிர்த்துதேர்தல் போட்டி நடத்தியவராவர். தம்முடைய வகுப்பினர் தாசித் தொழிலில் சிக்குண்டு தவிப்பதைத் தடுக்க, இவ்வம்மணி பாடுபடுவார் என்று ராமேஸ்வரம் வாசிகள் எதிர்பார்க்கிறார்கள் எனத் 'தமிழ்நா'டில் ஒரு நிருபர் தெரிவிக்கிறார்.

---

(2-ம் பக்கத்தின் தொடர்பு.)

பொறுக்கமுடியாமல் மதயானை கத்துவதுபோல ஆவெனக் கர்ஜித்தார். வைத்தியர் திடுக்கிட்டுத் தன்னைச் சமாளித்துக் கொண்டு, சிறிது நிதானித்து விபரீதம் ஏதும்நடந்துவிடுமோ வெனப் பயந்து வைதீகரின் வாயைத் துணியால் சுத்திசெய்து ஔஷதப் பிரயோகம் செய்து வலியில்லாதபடி செய்தார். வைதீகரின் மயக்கம் வெந்நீரால் மேலே பறந்து விட்டது. தானிருப்பது எந்த லோக மென்பது வைதீகருக்குச் சந்தேகமாகவே யிருந்தது. வைத்தியர் போதையை மாற்றும் மருந்து ஒன்றைக் குடித்தார். தான் செய்த அநியாய விபரீதத்தையும் வேலைக்காரியினால் செய்யப்பட்ட விபரீதத்தையும் கண்ட வைத்தியர் நடுங்கி வைதீகரை இன்மொழி கூறி மன்னிக்கும்படி வேண்டி, ஸ்நானம், செய்வித்து வேறு வேஷ்டி கொடுத்து அனுப்பிவிட்டார். பின் தான் ஸ்நானம் செய்வதற்காகத் தன் மனைவியிடம் வெந்நீர் வைக்கும்படி கட்டளையிட்டார். வெந்நீரும் வைத்தாய்விட்டது. வைத்தியர் ஸ்நானம் செய்வதற்காக ஆசனத்தில் அமர்ந்தார். அவர் மனைவி தனக்குள்ள கோபத்தால் வெந்நீரைச் சுடச்சுட ஊற்றிவிட்டாள்.

வைத்தியர் சூடு பொறுக்கமுடியாமல் அலறி விழுந்து மண்டை யுடைந்து உடம்பும் புண்ணாயிற்று.

பின்னால் தன் மனைவியை விஷமிட்டுக் கொன்றார். இதைச் சர்க்கார் வைத்தியர் பிணத்தை அறுத்து சோதனை செய்ததிலிருந்து அறிந்து, கிழவேலைக்காரியுமிதற்கு ஒத்திருந்ததாக விஷயம் உதயமாகி வைத்தியருக்கும் வேலைக்காரிக்கும் மரண பரியந்தம் அந்தமான் தீவின் கேண்மை கிடைத்தது.

குடிகார ஆடவனும், தீய குணமுள்ள துஷ்ட ஆடவனும் இல்லறம் நடத்தும் குடும்பங்களின் முடிவு இஃதே. கணவன் மனைவி இருவரும் நல்லவர்களாயமைந்து இல்லற வண்டியை யிழுத்துச் செல்வது உத்தமம். ஒருவர் தீதற்றும் மற்றொருவர் தூய்மையாயுமிருப்பது பாதகமில்லாத மத்திமம். இருவரும் வைத்தியரும் அவர் மனைவியும் போலிருப்பது அதமம்.

காதலர்களிருவரும் ஓருயிரும் ஈருடலுமாக அன்பெனும் கயிற்றால் பிணைக்கப்பட்டவர்களாக விருந்தால் தான் இல்லற மினிது. இன்றேல் துறவறமே இன்பம். பெண் அடிமை யெனும் நியாயமற்ற எண்ணத்தைப் புத்துக்குள் கைவிடுவது போல வெறுத்து அன்பெனும் ஆக்ஷியை இன்பமாய் ஏற்று இன்சொலெனும் செங்கோலால் இனிய வாழ்வு நடத்தவே [illegible]

Tamil Heritage Foundation International Digital Library EBook collection